முகில்வாணன்



# வண்ண எண்ணங்கள்

# வண்ண எண்ணங்கள்

**முகில்வாணன் நூல்கள்**

1. பொழுது புலரட்டும்.
2. மீட்பின் சுரங்கள்.
3. சுவையும் சுமையும்.
4. அவலங்கள்.
5. இன்னும் ஓர் இன்பத்துப்பால்.
6. அமைதியின் புன்னகை.
7. வண்ண உணர்வுகள்.

# வண்ண எண்ணங்கள்

## முகில்வாணன்

வெளியீடு: 87

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்
ஓகே.பாக்கியநாதன் அறிஞர்சோலை
இல.64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி
மட்டக்களப்பு, இலங்கை
தொ.பே. 065-2226658, 077-6041503
மின்னஞ்சல் : okpasolai@gmail.com

## பதிப்பு விளக்கம்


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | வண்ண எண்ணங்கள். |
| விடயம் | : | கவிதை. |
| நூலாசிரியர் | : | முகில்வாணன். |
| வெளியீடு | : | எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம். |
| பதிப்பகம் | : | ஓகே. பாக்கியநாதன் அறிஞர்சோலை. |
| பதிப்பு | : | 2015. |
| கணினி வடிவமைப்பு | : | ஓ.கே.கே. நிரோஷன். |
| விலை | : | 300/- |

ISBN978-7654-05-8



தொடர்புகளுக்கு

Muhilvanan Rasappah,
8/1 Adigar road,
Batticaloa.

மின்னஞ்சல்:

rasappah@googlemail.com

## சமர்ப்பணம்

வித்துவத் தமிழில்
வேகநடை கண்ட
முத்துக்கள் மூவருக்கு
சமர்ப்பணம்.

வித்துவான் F.X.C. நடராசா.
வித்துவான் சா.இ கமலநாதன்.
வித்துவான் க. செபரெத்தினம்.

பேராசிரியர் மா.செல்வராசா,கிழக்குப் பல்கலைக் கழகம்.
தலைவர். மட்டக்களப்பு தமிழ்ச் சங்கம்.

முகில்வாணன் இயற்றி வெளியிடும் 'வண்ண எண்ணங்கள்' கவிதைத் தொகுதிக்கு ஓர் அணிந்துரையை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சிய டைகின்றேன். மட்டக்களப்புத் தமிழகம் பெற்றெடுத்த ஒரு சிறந்த இலக்கிய கர்த்தா முகில்வாணனாவார். அவர் பல இலக்கிய ஆக்கங்களின் சொந்தக்காரர். சிறுகதை, நாவல், கவிதை என அவரது ஆக்கங்கள் மிகவும் கவர்ச்சியானவை. அதிகளவான வாசகர் வட்டத்தைக் கொண்டு விளங்குபவர். அவரது ஆக்கங்கள் எவ் வகையினவாயிருந்தாலும் அவை மட்டக்களப்பின் பழமை, பண்பாடு, இயற்கை எழில், இயற்கை வளம் என்பவற்றை வாசகரின் மனக் கண் முன் யதார்த்தமாகக் கொண்டுவந்து நிறுத்தும் தன்மையன. அவரது ஆக்கங்களை வாசிக்க எடுத்தால் வாசித்து முடிக்காமல் வைப்பதற்கு மனம் இடம் தரா.

அவரது "வண்ண எண்ணங்கள்" கவிதைத் தொகுதி எனக்கு மின்னஞ்சலில் கிடைத்த போது அதை வாசிக்கத் தொடங்கினேன். என்னை அறியாமலேயே வாசித்துக் கொண்டுபோன எனக்கு நேரம் போனது தெரியாமல் போயிற்று. வீட்டில் மதிய உணவுக்கு அழைத்த போதுதான் மணி பிற்பகல் 2.00 ஆக இருந்தது தெரிந்தது. அவ்வளவுக்கு கவிதை நயம் கொண்டவையாக, அவை ஒவ்வொன்றும் விளங்கின. ஒவ்வாரு கவிதையும் தனிவண்ணமென்பதில் ஐயமில்லை.

**".இறைச்சி, பால், தயிர் தினமும்**
**இல்லங்களில் நிறைந்திருக்கும்.."**

இத்தனை வளம் நிறைந்த எங்கள் தேனாட்டில் உள்ள எல்லைப் பரப்புக் காணிகளை இழந்து இன்று தவிக்கின்றோம்" எனத் தற்போதைய மட்டக்களப்பு நிலையைக்கூறி வருந்துகின்றார் முகில்வாணன். அவரது மண் பற்றிய ஆழம் இதில் தொனிப்பதைக் காணலாம்.

எங்கள் பூமி எனும் கவிதையில் தாய் மண்ணின் செழிப்பை

**"நாடங் கொடி நடந்து**
**கூரைமேல் படுத்துறங்கி**
**கொத்து மலர் பூத்து**
**குடங்குடமாய் காய்த்திருக்கும்"** எனவும்
**...."வண்ண வண்ணப் பூக்கள்**
**வளவையே அலங்கரிக்கும்**
**தேனெடுக்க குருவியெல்லாம்**
**சிறகு தட்டிப் பறந்து வரும்**

என்பதன் மூலம் தம் மண்ணின் செழிப்பு, எழில் என்பனவற்றை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துவதைக் காணுகின்றோம்.

விடியலைத்தேடி எனும் கவிதையில் பாரதி ஆதிபராசக்தியிடம் வேண்டும் பாங்கில்

"…. தேடும் சுதந்திர
வேட்கை தணிந்திட
தெய்வம் உதவ வேண்டும்
.....தாகம் தணிந்திட
தமிழர் இணைந்திட
நீதி நிலவ வேண்டும் ….
பாரில் நமக்கொரு
பண்பு இருப்பதை
படித்து உணர வேண்டும்"

எனத் தெய்வத்தை வேண்டுவதாக அமையும் கவிதை வரிகள் இன்றைய தேவையை உணர்ந்து தெய்வத்தை வேண்டும் பாரதியின் சாயலை முகில்வாணனிடம் காண்கின்றோம்.

புதுவாழ்வு எனும் கவிதையில் பாரதிதாசனின் பாணியும் முகில் வாணனிடம் தென்படுகின்றது.

"அறம் உயரப் பாடுபடு தம்பி
..........................................................
திறன் அறிந்து சேர்ந்திடடா தம்பி
வறுமைத் துயர் போக்கிடடா தம்பி
வரலாற்றில் நிலைத்திடடா தம்பி
பொறுமை அன்பு காத்திடடா தம்பி
புதுவாழ்வை அடைந்திடடா தம்பி"

என இளைய தலைமுறையினரை விழித்து அறிவுறுத்தும் பாங்கினைக் காணமுடிகின்றது.

மேலும் 'மரணம்' எனும் கவிதையில் நிலையாமை மட்டும்தான் நிலைத்திருப்பது என்ற பெரும் தத்துவத்தைக் கூறுகின்ற கவிஞன் ஒரு தத்துவ ஞானியின் சாயலையும் எடுத்துக் கொள்வதையும் காணு கின்றோம்.

"..........................................................
நேற்றிருந்தார் இன்று இல்லை
நீரலைதான் வாழ்க்கை........
மாற்றமென்ற ஒன்றுக்குள்
மாறிவிடும் வாழ்க்கை" என வாழ்வின் நிலையாமை பற்றித் தெளிவுறுத்துகின்றார்.

'அன்னை' எனும் கவிதையில் தாயை ஆதிபராசக்தியாக கூறுவதை நாம் கண்டு கொள்ள முடியும்.

"சக்தியின் பேரன்பே
தாயாக வந்திருந்து
உத்தமராய் எம்மை வளர்க்க
ஓயாது
உழைத்துச் சென்ற
அன்னையை மறப்பதுண்டோ"

என்பதன் மூலம் தாய் உருவம் எடுத்துவந்தது அன்னை பராசக்தியே என்றும் எம்மை உத்தமராக்க அவள் உழைத்து மறைந்ததையும் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றார் கவிஞர்.

யுத்தத்தினால் நம் மண்ணில் மக்கள் தொகை பல்லாயிரக்கணக்கில் அழிந்ததை நினைந்து வருந்தும் கவிஞர் 'வெல்லுவோம்' எனும் கவிதையில்

"............... .மரணம் வருகின்ற
தருணம் எனினும்
மழலைகள் பிறப்பு
உயரட்டும்
இறப்பது இரண்டாய்
இருந்தால் கூட
பிறப்பது
நாலாய்ப் பிறக்கட்டும்

என்று கூறுவதிலிருந்து அவர் மக்கட் செல்வத்தின் மேன்மையை வலியுறுத்தி அம்மக்கள் செல்வம் பெருக வேண்டும் என ஆதங்கப' படுவதைக் காணுகின்றோம்.

கவிதைத் தொகுதியில் உள்ள ஒவ்வொரு கவிதையும் தனித்தன்மையும் சிறப்பும் கொண்டவை. அவர் சூட்டிய பெயருக்கு ஒப்ப ஒவ்வொன்றும் தனிவண்ணமானவை. ஓரிரு கவிதைகள் உதாரணத்திற்கு இங்கு எடுத்தாளப்பட்டுள்ளன. முகில்வாணனின் கவிதைத் தொகுதி கவிதை வளம் நிறைந்தது கவிதை இலக்கணம் அமையப் பெற்றது என்று கூறுவது மிகையன்று. அவர் இன்னும் எமது மண்ணின் சிறப்புக்களை ஆயிரமாயிரம் கவிதைகளில் வடிக்க இறைவன் அவருக்கு நீடித்த ஆயுளும், உற்சாகமும், தைரியமும் வழங்க வேண்டும் எனப் பிரார்த்தித்து இவ்வணிந்துரையை நிறைவு செய்கின்றேன்.

28. 03.2014

இந்நூலின் ஆசிரியரும் கவிஞருமான நண்பர் முகில்வாணன் அவர்கள் படைப்பிலக்கியத் துறைக்குப் புதியவரல்ல . நான் அறிந்தவரை இவர் கடந்த 1982 இல் இருந்தே எழுதி வருகின்றார் . கவிஞர் முகில்வாணன் அவர்கள் கருவிலே 'திரு' என்பதுபோல் இயல்பாக இளமையில் இருந்தே இவர் ஒரு கவிஞர்தான். இதற்கு எடுத்துக்காட்டாக இவருடைய இலக்கிய, அரசியல் மேடைப் பேச்சுக்களே சான்றாதாரமாகும்.

ஒரு காலகட்டத்தில் நண்பர் முகில்வாணனுடைய அரசியல் மேடைப்பேச்சினைக் கேட்டதனால் நான் இவர்பால் ஈர்த்திழுக்கப்பட்டேன். அன்று அவர் மேடைகளில் பயன்படுத்திய அடுக்குமொழிச்சொற்கள்அனைத்தையும் பாவேந்தர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனதும் , பாவல்லோன் சாரணபாஸ்கரனதும் கவிதைகளைப் படிப்பது போன்றதொரு உணர்வினை எனது மனதில் ஏற்படுத்தியது.

அந்த அளவிற்கு நண்பரின் தமிழ்மொழி நடையானது மேடைப்பேச்சு என்று சொல்ல முடியாத கவிதை நடையாகவே அமைந்திருந்தது. இதனை உறுதிப்படுத்துவது போல் காலஞ்சென்றவரும் கொக்கட்டிச்சோலையை பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு இந்துக்கல்லூரிக்கு அண்மையில் வாழ்விடமாகவும் கொண்டு வாழ்ந்த அண்ணன் பாலசிங்கம் என்பவரும் எனது மன உணர்விலே சொல்லி மகிழ்ந்து பாராட்டினார் . இதனை நண்பர் அறியார்.

கவிஞர் அவர்களை நான் 1970 காலத்தில் இருந்து அறிவேன். அவரோடு நெருங்கி இலக்கிய அமைப்புக்களிலும் கவியரங்கக் கவிதை நிகழ்வுகளிலும் 1972 இல் இருந்து பழகி வருபவன் என்ற வகையில் எங்கள் இருவருக்கும் இடையில் நீண்ட கால இலட்சியமும், இலக்கிய உணர்வும் இரட்டைக்குழல் துப்பாக்கியாக ஒட்டுமாஞ்செடியாக இருந்து வருகின்றது .

இதன் காரணமாக நான் பிறந்த திருப்பழுகாமத்தில் உள்ள திருக்குறள் முன்னணி கழகம் 1982 இல் முத்தமிழ் விழாவிற்காக அதனை சிறப்பிக்கும் முகமாக கலாநிதி ஈழமேகம் , ஆம் ! பேரறிஞர் அண்ணா அவர்களால் புனைப்பெயரிட்டழைக்கப்பட்ட கலாநிதி பக்கீர்த்தம்பி சம்மாந்துறை,சொல்லின் செல்வர் ஏ. இளஞ்செழியன் , இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் கொழும்பு , திரு .க.நவஜோதி , கலைஞர் கருணாநிதி பொதுப்பணி மன்றத்தின் தலைவர் கொழும்பு ஆகியோரை விழாவிற்கு அழைத்திருந்தேன்.

அந்த அறிஞர்கள் பங்குபற்றிய விழாவிற்கு நண்பர் முகில்வாணன், தம்பி கவிஞர் செ. பத்மநாதன் ஆகியோரையும் ஒரு கலை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து கலந்து கொள்ளும்படி வேண்டிய தன் பேரில் இவர்கள் இருவரினாலும் ஏற்பாடு செய்யப்பட்ட கூத்து நிகழ்வில் நண்பரின் கூத்தின் ஆடலும்பாடலும் ஊர்மக்களையும் அம்மேடையில் உள்ள அறிஞர்களையும் மெய்மறக்கச்செய்தன.

இதனைக் கூறக் காரணம் கவிஞர் முகில்வாணன் அவர்கள் கவிஞர் மட்டுமல்ல. நல்ல ஆளுமையுள்ள எழுத்தாளர் , பேச்சாளர், சஞ்சிகை ஆசிரியர் , நல்ல குரல் வளமுள்ள பாடகர் , நாடக நடிகர் ,நாடக தயாரிப்பாளர், கூத்துக்கலைஞர் என இவர் சார்ந்த , ஈடுபாடுள்ள துறைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். அப்பேர்ப்பட்ட 'பல்கலை அரசு' இவர்.

நண்பர் முகில்வாணருடைய கவிதைகள் எதனைக் எடுத்து கொண்டாலும் அவை மரபாக இருக்கலாம் அல்லது புதுக் கவிதையாக இருக்கலாம். அக்கவிதைகள் அனைத்தும் எதுகை, மோனையோடு இணைந்த சந்தநயம் மிக்க கவிதைகளாகவே இருக்கும். குறிப்பாக கீழ்க்குறிப்பிடப்படும் மரபுக்கவிதையானது 'புதுவாழ்வு' எனும் தலைப்பினுள் வரும் கவிதை இதில்:

**" நிலவில் ஏறி நடந்திடடா தம்பி**
**நீலக்கடல் உடைத்திடடா தம்பி**
**உலக வலம் சென்றிடடா தம்பி**
**உயிர் மானம் காத்திடடா தம்பி "** எனும்

இந்தக் கவிதை எதுகையோடு பொழிப்பு மோனையும் இணைந்த எண்சீர் கழிநெடிலடிக்கவிதையாக ஓசை நயம் மிக்க காலத்திற்கு ஏற்ற கருத்தும் புதைந்துள்ள கவிதையாக அமைந்துள்ளது.

மேலும் ஒரு புதுக்கவிதையை எடுத்துக்கொண்டால் இது 'நீயா நானா?' எனும் தலைப்பில் வரும் புதுக்கவிதை இதிலே

**"பொழுது படும் நேரமெல்லாம் ஒரு சோகம்**
**ஏதும் புரியாமல் எரியுதடா என் தேகம் !"**

இந்தக் கவிதையிலும் சோகம் தேகம் என்ற எதுகையோடு நல்ல சந்தமும் பொருள் நயமும் வந்துள்ளதைக் காணலாம். எனவே நண்பர் அவர்களின் புதுக்கவிதைகளை பெரும் கவிஞர்களான காலஞ்சென்ற கவிஞர் வாலி அவர்களின் 'பாண்டவர்பூமியோடும்'கவிஞர் மேத்தா அவர்களின் 'நாயகம் ஒரு காவியம் ' போன்ற பாடல்களோடும் ஒப்பிடக்கூடிய கவிதைகளாகவே மிளிர்கின்றன.

மட்டுமல்லாமல் நண்பர் முகில்வாணன் அவர்களின் சிந்தனை சொல் செயல் அனைத்தும் தான் பிறந்த மண்ணையும் பேசும் மொழியையும் பேணும் நாகரீகம் போன்றவைகளையுமே மையப்படுத்தி வடிக்கப்பபட்ட கவிதைகள் தான் என்றில்லாமல் கால மாற்றத்தை கருத்தில் கொண்டு

**"அறிவின் ஆற்றல்**
**பெருகப் பெருக**
**இருளின் இருப்பிடம்**
**மறைந்து போகும் "**

என்ற பாடலடிகள் காய்களை உருட்டிக் கணக்குப் போட்டுப் பேய்களை விரட்டுகின்றோம் என்ற அறிவிலிகளுக்குச் சொல்லும் பாடமாகும்.

**"கொன்றவரும்**
**வென்றவரும்**
**வீழ்ந்து போவர்.**
**கோயில் கட்டி**
**வாழ்ந்தவரும்**
**மறைந்து போவர்"**

என்று சொல்லும் கவிதை வரிகள் எத்தனையோ எண்ணற்ற சிந்தனையாளர்கள் , தியாகிகள் , விஞ்ஞானிகளால் மனித இனத்தின் விடிவிற்காகக் கண்டுபிடித்த சாதனங்களை எல்லாம் தங்கள் சுயநலத்தின் பேரில் அஞ்ஞானத் துறைகளிலே பயன்படுத்தி , மனித இனத்தை இருளிலே தள்ளி தெய்வ அருளிலே வாழ எண்ணும் சோம்பேறிகளுக்கு விடுக்கும் எதிர்வு கூறலாகவும் இருக்கின்றன.

மேலும் வணக்கம் வாழ்க வேண்டுதல் வாருங்கள் தேநாடு என வகைப்படுத்தி மொத்தம் ஐம்பத்து ஆறு தலைப்புக்களில் அறு சுவை விருந்தாக தமிழ் அன்னையின் பாதங்களின் படையலாய்ப் படைத்துள்ளார். நண்பர் அவர்கள் எங்கிருந்தாலும் என்னதான் இன்னல் இடர் ஏற்பட்டாலும் அவை அனைத்தையும் மனபலத்தால் தகர்த்தெறிந்து

**"துன்பமுற வரினுஞ் செய்க துணிவாற்றி**
**இன்பம் பயக்கும் வினை "**

என்ற ஐயன் வள்ளுவனாரின் திருக்குறளடிகளுக்கேற்ப நல்ல தொரு இலக்கைஇ மனிதம் அடைய மேலும் சில இலக்கியப் படைப்புக்களைப் படைக்க வேண்டுமென வேண்டி உளமார வாழ்த்தி நிற்கும்.

**என்றும் பணிவுள்ள**
**ஆ.மு.சி. வேலழகன்**

**டாக்டர் ஓ.கே. குணநாதன்,**
**மேலாளர் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்**

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் இன்னுமொரு வெளியீடாக வெளி வருகிறது முகில்வாணன் எழுதிய வண்ண எண்ணங்கள் என்னும் நூல்.

இந் நூல் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 87வது வெளியீடாக வெளிவருகிறது.

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் வெளியீடாக முகில்வாணன் எழுதிய இந் நூல் வெளிவருவதில் பெரு மகிழ்வாக இருக்கிறது.

முகில்வாணன் மூத்த கவிஞர்களுள் ஒருவர்.ஆளுமைமிக்க கவிஞர். மட்டக்களப்பில் பிறந்து வளர்ந்த கவிஞர் தற்பொழுது ஜேர்மனி நாட்டில் வாழ்கின்றார்.

மட்டக்களப்பு கிராமத்தில் பிறந்த முகில்வாணன் கவிஞராக, எழுத்தாளராக, சமூக சேவகராக,மூத்த அரசியல்வாதியாக தன் ஆளுமையை உலகறியச் செய்தவர்.

அரசியல் சூழலால் புலம் பெயர்ந்து தொடர்ந்து தனது தமிழ்ப்பணியை ஜேர்மனி நாட்டில் இருந்து செய்து கொண்டு வருகின்றார்.

ஏலவே இவர் எழுதிய பல ஆக்கங்கள் நூலுருப் பெற்றிருக்கின்றன. அவ்வாக்கங்கள் நூலுருப் பெற்றிருக்கின்ற போதிலும் இவ்வாக்க நூலானது அவருக்கு ஒரு அழியாத தடத்தை ஏற்படுத்தி விடும் என நம்பலாம்.

இவருடைய குடும்பமே ஒரு எழுத்தாளர் குடும்பம்.

இவருடைய சகோதரர் வணபிதா பேராசிரியர் அன்ரனி ஜான் தமிழிலும்-ஆங்கிலத்திலும் புலமைமிக்க எழுத்தாளர். சர்வதேச இலக்கியத்தளத்தில் பேசப்படுகின்ற பல ஆய்வு நூல்களை எழுதி எமது மண்ணுக்கு பெருமை சேர்த்தவர். தற்பொழுது அமெரிக்காவில் வசித்து வருகின்றார்.

இவருடைய இலக்கிய புலமைக்காக கடந்த ஆண்டு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் மூத்த படைப்பாளிகளுக்கான தமிழியல் விருது வழங்கி கௌரவித்தது.

கவிஞன் முகில்வாணன் இன்னும் பல நூல்களைப் படைக்க வேண்டும். நீடூழி வாழ வேண்டும் என்று இறைவனை பிராத்திக்கின்றேன்.

## 1. வணக்கம்

அன்னைக்கும் அன்னையான
அருந்தமிழே வணக்கம்.
என்னை உயிர்ப்பித்து
இசைப்பவளே வணக்கம்.
பூவுக்குள் புன்னகைக்கும்
பூந்தமிழே வணக்கம்.
பாவுக்குள் இசையாகும்
பைந்தமிழே வணக்கம்.
தென்றலோடு நடனமாடும்
தென் மொழியே வணக்கம்.
என்றுமிளங் குமரியாக
இனிப்பவளே வணக்கம்.
நெடிய வான் போலுயர்ந்த
நிறை மொழியே வணக்கம்.
கொடிய பகை அறுத்தெறியும்
குரு மொழியே வணக்கம்.

## 2. வாழ்க

சித்தமெல்லாம் இனிக்கின்ற
செந்தமிழ்ப் பண்பு வாழி!
முத்து நரை தவழுகின்ற
மூத்த தமிழ்ப் புலவர் வாழி!
பொதுமையிலும் புதுமை செய்யும்
புதிய தமிழ்க் கவிஞர் வாழி!
எதுகையோடும் மோனையோடும்
இருக்கின்ற நாட்டார் வாழி.

## 3.மண்ணின் மகிமை

வண்ண எண்ணங்களாய்
வந்து வந்து போறவளே,
தென்குமரிச் சீமையிலே
திருமகளாய் உதித்தவளே,

கன்னல் மொழிக் காரிகையே
கற்கண்டுச் சொற்சுவையே,
சின்ன இடைச் சித்திரமே
செம்மொழியின் அற்புதமே.

எழுவானாய் படுவானாய்
இன்ப சுகம் தருபவளே
முழுமதியின் வண்ணத்தில்
முகிழ்த்திருக்கும் தேனாடே.

பொன் மகளே பூ மகளே
புத்தம் புதுக் கலையழகே
உன்மடியில் நான் உறங்க
என்ன தவம் செய்தேனம்மா.

## 4. வேண்டுதல்

குற்றமற்ற தமிழறிவால்
கோலுயர்ந்து ஆள்கவே.
கற்றறிந்த தமிழறிஞர்
சுற்றி நின்று காக்கவே.

தீதறியா மனங்களெங்கள்
தீவில் நாளும் வளர்கவே.
யாதுமூரே யாவரும் கேள்
என்ற தமிழ் முழங்கவே.

ஆற்றல் மிக்க புதுவரவை
அணைத்து மகுடம் சூட்டுவோம்.
காற்றணைத்த விண்வெளியில்
கணனி வலை பின்னுவோம்.

## 5. வாருங்கள்

காலம் கடந்தும் வாழும்
கன்னித் தமிழ் மொழியில்
காதல் கொள்வோம்
இணைந்து வாருங்கள்.

புத்திசை நூல்கள் இப்
புவி மீது ஓங்கி வெல்ல
சித்தம் கொள்வோம்
ஒன்று சேருங்கள்

நாளும் பொழுதும் மக்கள்
வாழும் கலை படைக்க
நம்பிக்கை கொண்டு
உழைப்போம் வாருங்கள்.

பாழும் பகை உணர்வில்
மாழும் மனிதர் தம்மை
காலம் அறிந்தே
காப்போம் வாருங்கள்.

நுண்ணொலியில் மிளிரும்
பண்ணொலியில் மயங்கி
பாட்டு இசைப்போம்
ஒன்று கூடுங்கள்.

கண்ணெதிரே மின்னும்
கதிரவன் வீச்சினைப்போல்
கவி வடிப்போம்
ஒன்று சேருங்கள்.

இசை வழியே புகுந்த
இலக்கியப் பாங்கினையே
எடுத்துரைப்போம்
ஒன்று சேருங்கள்.

இசை வழி நாட்டியத்தின்
இலக்கண மரபினையே
எடுத்து உரைப்போம்
ஒன்று கூடுங்கள்.

## 6. தேனாடு

பல்லவி.

குயில் கூவிக் கவிபாடும்
தேன் சிந்தும் மீன் நாட்டின்
திருப் பாடல் மீன் பாடுதே
மட்டு நகர் மண்ணின்
புகழ் பாடுதே.

அனுபல்லவி.

கடல் ஆட, அலை ஆட,
அதில் ஓடும் படகாட
விழி ஆட, கொடி ஆட,
விளை நெற் கதிர் ஆட
கலைத் தாயின்
அருள் வீசுதே –மட்டு
நகர் மண்ணின்
புகழ் பாடுதே.

சரணங்கள்.

அழகான வயலை
அரும்பான கதிரை
வலைவீசும் கலையை
வனப்பான தோப்பை
வாவிக் கரை மோதும்
வளர் தென்றல் காற்றை
மீனாட்டின் வளமாய்
நான் காணுகின்றேன்.

தெம்மாங்கு பாட்டை
தென்மோடிக் கூத்தை
எழுவானின் கதிரை
படுவானின் அழகை
முகில்கூடிக் காவும்
முத்தான மழையை
மீனாட்டின் வளமாய்
நான் காணுகின்றேன்.

விழிபேசும் அன்பை
விருந்தோம்பும் பண்பை
அசையாத நட்பை
அயராத உழைப்பை
கலைஞனும் வலைஞனும்
கைகோர்க்கும் உறவை
மீன் நாட்டின் வளமாய்
நான் காணுகின்றேன்.

மண்முனை ஆற்றை
மாஞ்சோலை காற்றை
மருத நீர் ஊற்றை
மல்லிகைப் பூ சோற்றை
புன்னையும் தென்னையும்
பூச் சூடும் அழகையும்
மீன் நாட்டின் வளமாய்
நான் காணுகின்றேன்.

## 7. உனக்கும் எனக்கும்

சிந்திக்கத் தெரியாத
மனிதர்கள் வாழ்வு
சீராய் அமையாது.
நிந்தை அவமானம்
சூழ்ந்தவர் நெஞ்சில்
நிம்மதி நிலையாது.

அடுத்தவர் கவிதையை
எடுத்தாள முயல்பவன்
சிறக்கவே முடியாது.
கெடுத்தாளும் எண்ணம்
உடையவன் வாழ்வில்
வளம்காண முடியாது.

கருத்துச் சுதந்திரம்
இல்லாத நாட்டில்
கற்பனை வளராது.
நெருப்பில் குதித்து
நீந்தாது போனால்
நீதி பிழைக்காது.

சரித்திரக் கதவுகள்
உடையாது போனால்
சாதனை தெரியாது.
தரித்திரன் உழைத்திட
மறுப்பானே ஆனால்
தன் நிலை மாறாது.

விழுந்தவர் எழுந்தே
நிமிராது போனால்
விடியல் தெரியாது.
பழந்தமிழ் நூல்களை
படிக்காது போனால்
இளந்தமிழ் இனிக்காது.

புதுமையை விரும்பா
மனிதர்கள் உலகை
புரட்டவே முடியாது.
எதுவரை இருக்கும்
புகழுரை என்பதை
இசைத்திட முடியாது.

## 8. வேண்டுகிறேன்

புத்தம் புது
பூமியொன்று
புலர வேண்டும்.
கத்தும் கடல்
அலையை நாம்
தாண்ட வேண்டும்.
நித்தமொரு
தத்துவத்தை
படிக்க வேண்டும்.
சத்தியத்தின்
பாதையேறி
செல்ல வேண்டும்.

நீல நெடு
வானம்போல்
உயர வேண்டும்.
நிலமகளின்
அமைதிக்காய்
உழைக்க வேண்டும்.
தோழமையில்
அனைவரும்
இணைய வேண்டும்.
துடிப்போடு
தொண்டுகளைச்
செய்ய வேண்டும்.

எப்போதும்
முப்பாலைப்
பருக வேண்டும்.
இயலிசை
நாடகத்தை
வளர்க்க வேண்டும்.
தப்பாமல்
பெற்றோரை
வணங்க வேண்டும்.
தமிழ்போன்று
பிறமொழி
மதிக்க வேண்டும்

தன்னலத்தை
மறந்து நாம்
வாழ வேண்டும்.
தன்னுயிர்போல்
பிற உயிரை
மதிக்க வேண்டும்.
எண்ணத்தில்
நல்லுணர்வை
விதைக்க வேண்டும்.
என்றென்றும்
மனிதராகத்
திகழ வேண்டும்.

## 9. எங்கள் பூமி

எங்களுக்குச் சொந்தமான
எங்கள் பாட்டன் பூட்டரெல்லாம்
சங்கத்துக்கு முன்பிருந்தே
தமிழ் வளர்த்த பூமியிது.

கருங்காலி, காட்டு வேம்பு,
முதிரை, தேக்கு, விண்ணாங்கு,
மருத மரச் சோலையாக
மலர்ந்திருந்ததெங்கள் வனம்.

காடுகள் வெட்டினோம்.
களணிகள் அமைத்தோம்.
மாட்டேர் பூட்டினோம்.
வரப்புகள் கட்டினோம்.

வயல்கள் விதைத்தோம்.
வாழ்வை வளர்த்தோம்.
உயரிய பண்பையே
ஊட்டி வளர்த்தோம்.

நிலம் செழித்தது,
வளம் கொழித்தது,
புண்ணிய பூமியோ
பூத்துக் குலுங்கியது.

வாசலுக்கு முன்பிருந்த
வாய்க்கால் வழியாக
பச்சை மஞ்சல் கருநிறப்
பனையான்கள் ஓடிவரும்.

குளத்து நீர் குடித்து
கொழுத்துப் பெருத்திருந்த
குறட்டை, கொக்குச்சான்
கூடிக் கூடியே ஆடிவரும்.

சுங்கான், விரால், ஆரல்
சுற்றி வந்து விளையாடும்.
தங்க நிறத் தவளைகள்
தாளத்துக்கு குரலெடுக்கும்.

வக்கடை நீரிடைக்குள்
அத்தாங்கை வைத்து
அழுத்தினால் போதும்
ஏறு கெழுத்திக்கூட்டம்
ஏறி வந்து சலசலக்கும்.

மக்கிழுப் பொட்டியானும்,
மடிபெருத்த கணையானுமாய்
எத்தனையோ மீன் வகைகள்
எங்களோடு வாழ்ந்ததன்று.

நாடங் கொடி நடந்து
கூரைமேல் படுத்துறங்கி
கொத்து மலர் பூத்து
குடங்குடமாய் காய்த்திருக்கும்.

பாவ புடலை எல்லாம்
பந்தலிலே பாய் விரிக்கும்.
கொச்சி வழுதிலைகள்
கூடாரத்துள் பூத்திருக்கும்.

வத்தாள மரவள்ளி
வளவெல்லாம் நிறைந்திருக்கும்.
வாழை பிலா மாமரங்கள்
வகை வகையாய் காய்த்திருக்கும்

பொன்னாங்கன்னி திராய்
புளிச்சகீரை வல்லாரை
பூவலடி ஓரமெல்லாம்
புன்னகைத்து படர்ந்திருக்கும்.

அகத்தி மரம் பூத்திருக்கும்.
ஆசணிகள் காய்த்திருக்கும்.
அவரைக் கொடி பந்தலிலே
அடர்த்தியாய் காய்த்திருக்கும்.

வண்ண வண்ண பூக்கள்
வளவையே அலங்கரிக்கும்.
தேனெடுக்க குருவியெல்லாம்
சிறகு தட்டிப் பறந்து வரும்.

கவரிமான் மரைகளோடு
காட்டுப்பன்றி முயல்கள்
கூட்டமாய் வந்தெங்கள்
குடியிருப்பில் பாத்திகட்டும்.

பட்டிகளில் உடன் கறந்த
பசும் பால் குடங்கள்
இளம் சூடு தணியாமலே
எங்கள் வீடு தேடி வரும்.

இறைச்சி பால் தயிர் தினமும்
இல்லங்களில் நிறைந்திருக்கும்.
நிறை நிலாக் காலங்களில்
நித்தம் ஒரு கூத்திருக்கும்.

காட்டுக் கறிவேப்பிலையின்
கமகமக்கும் வாசனையை
வீட்டுக்கு வீடு காற்று
விலாசமாய் எழுப்பிவிடும்.

மாதம் நான்கு வெள்ளியும்
மண் சட்டி பானைகளில்
மணங் குணங்களோடு
மரக்கறி சோறு பொங்கும்.

மென் தென்றல் வந்தெங்கள்
மேனி தொட்டு விளையாடும்.
பண் ஒலியை மாங்குயில்கள்
பாடிப் பாடிப் பரவசிக்கும்..

கற்பனை பறவைகள்
காற்றில் சிறகடிக்கும்.
அற்புதக் கவிதைகள்
அழகாக மெட்டமைக்கும்.

உழைத்துக் களைத்த
உழவர் பெருமையை
நிலத்தில் பழுத்திருக்கும்
நெல்மணிகள் விளக்கும்.

கூத்து, குரவை,
கோலாட்டம் கும்மியென்று
ஆற்றைக் கடந்தும்
ஆர்ப்பரித்ததெங்கள் கலை.

மும்மாரி மழையில்
மூதறிஞர் உழைப்பில்
என்னாளும் செழித்தது
எங்கள் நிலப்பரப்பு.

இத்தனை வளம் நிறைந்த
எங்கள் தேனாட்டிலுள்ள
எல்லைப்புரக் காணிகளை
இழந்தின்று வருந்துகிறோம்.

## 10. தென்றல் பாடுது

ஒரு தென்றல் காற்று
மன்றம் வந்து
கவிதை பாடுது.
என் மனதிலூறும்
சுரங்கள் யாவும்
இசையாய் மாறுது.
இனிச்
சோகம் இல்லை
துயரம் இல்லை
தாகம் தணிகிறது.

நல்லவர் வாழ
வல்லவர் வகுத்த
வளமிகு திரு நாடு.
உயர்
சொல்லில் சுவையும்
சுதந்திர ஒளியும்
சுடர்விடும் தாய் நாடு.
இனி
வறுமைத் தொல்லை
இல்லை என்று
சுதந்திரப் பண்பாடு.

அமுதத் தமிழை
அரங்கினில் ஏற்றி
இசைபட நீ ஆடு.
அந்த
இமையவர் போற்றும்
அறம் பொருளின்பம்
உயிர்பெற நீ பாடு.

அன்பில் விளைந்த
அமைதியை இந்த
அவனியில்
நிலை நாட்டு.
நம்
ஆன்றோர் வளர்த்த
மரபினைக் காக்க
அயராது போராடு.

## 11. காவியம் பாடு

பல்லவி

பூரண நிலவில்
வாவி நீர் அடியில்
மீன்மகள் பாடி
மகிழ்ந்திருப்பாள்.
சீரிழந் தமிழில்
காவியம் பாட
பாவலர் கூடித்
தவம் இருப்பார்,
இது
காவியம் பாடும்
மீனாடு,
கலைக்
காற்று வீசும்
தேனாடு.

சரணங்கள்.

நீரும் சோறும்
தந்த நிலம்.
நெஞ்சில் தூய்மை
வார்த்த நிலம்.
ஊரும் உறவும்
காத்த நிலம்.
உயிர்
மூச்சில் உணர்ச்சி
கலந்த நிலம்.

புதுமைக் கோலம்
பூண்ட நிலம்.
புவியோர் வாழ்த்தும்
வீரர் நிலம்.
முதுமை அறிவில்
உயர்ந்த நிலம்
முத்
தமிழும் வாழும்
இன்ப நிலம்.

அழகின் இளமை
பூத்த நிலம்.
அமைதி தவழும்
நந்தவனம்.
உழவுத் தொழிலில்
உயர்ந்த நிலம்
எம்
உற்றார் உறவைக்
காக்கும் நிலம்.

பூவின் வாசம்
வீசும் நிலம்.
பொறுமை அன்பு
காத்த நிலம்.
பாவின் சுரங்கள்
பேசும் நிலம்
எம்
பாட்டன் பூட்டன்
வாழ்ந்த நிலம்.

நீலக் கடலால்
சூழ்ந்த நிலம்.
நீதி நெறியைக்
காத்த நிலம்.
நிலவு அமுதைப்
பொழியும் நிலம்
எம்
நேசம் நிறைந்த
மட்டு நிலம்.

## 12. வெல்லுவோம்

வெள்ளமென
உள்ளமதில்
விழிப்புணர்வு
பரவட்டும்!

கள்வரும் கயவரும்
உள்ளம் திருந்தி
ஓர் அணியாய்த்
திரளட்டும்!

மரணம் வருகின்ற
தருணம் எனினும்
மழலைகள் பிறப்பு
உயரட்டும்!

இறப்பது இரண்டாய்
இருந்தால்கூட
பிறப்பது நாலாய்ப்
பிறக்கட்டும்!

துறவறம் நமக்குள்
இப்போது வேண்டாம்
குருகுலம் திருமணம்
முடிக்கட்டும்!

வேற்றுமை விளைந்த
நிலங்களில் இனிமேல்
ஒற்றுமைப் பயிர்கள்
முளைக்கட்டும்!

பூமியில் மடிந்த
தமிழருக்கிணையாய்
புதிதாய் சனத்தொகை
பெருகட்டும்!

தேற்றுவார் அற்றுத்
திரிகின்ற அறிஞரை
போற்றி இணைப்போம்
வாருங்கள்.

மாற்றுக் கருத்துக்கும்
மதிப்பைக் கொடுத்து
ஏற்ற வழிகளில்
இணைந்திடுவோம்.

## 13. பூபாளம் கேட்குது

பூமகள் இனிமேல்
புண்ணிய நதிகளால்
பூப்பு
நீராட்டப்படுவாள்.

உயிரினமெல்லாம்
உரிமைக் காற்றை
உண்டு
மகிழ்ந்தே சிரிக்கும்.

இயற்கை நமது
சுமையின் கனத்தை
இறக்கி
அமைதியைக் கொடுக்கும்.

அமைதியைத் தேடி
அலைந்திடும் நெஞ்சம்
ஆனந்தக்
கூத்துக்கள் ஆடும்.

ஆற்றிலும் கடலிலும்
தோணிகள் இனிமேல்
பாய்களை
விரித்தே ஓடும்,

அத்தி மரத்தையும்
அரச மரத்தையும்
அலை மகள்
நீரால் கழுவும்.

அழுதவர் குரல்கள்
கவிதைகள் பாட
விழுதுகள்
துணையாய் இருக்கும்.

அருவிகள் கூட
அமைதிப் பாவின்
வரிகளைத்
தேடிப் படிக்கும்.

ஆயுதச் சிறையில்
வாடிய புலவர்
பாடிய
கீதங்கள் இனிக்கும்.

அடக்கு முறையில்
ஆட்சி நடத்திய
அரக்கர்
கொடியும் வீழும்.

இரும்புத்திரைக்குள்
இதுவரை நடந்த
கொடுமைகள்
வெளியே தெரியும்.

தரணியில் தமிழினம்
மறுபடி பண்பினில்
தளைத்து
உயிர்த்தே ஓங்கும்.

அழிந்ததைக் கட்டவும்
உடைந்ததை ஒட்டவும்
அகிலம்
நமக்குள் இணையும்

ஒருவருக் கொருவர்
உறவினர் என்பதை
உள்ளங்கள்
விளங்கிக் கொள்ளும்.

பாட்டுக்கும் சுதந்திரம்
கிடைத்து விடும்.
நம் நாட்டுக்கும்
அமைதி கிடைத்து விடும்.

## 14. அடிமை இல்லை

பல்லவி

விடியுது விடியுது
கடுமிருள் மடியுது
அடிமைகள் கொடுமைகள்
அடியோடு முடியுது
எழுந்துவா!
இளைஞனே எழுந்துவா!

சரணம்

ஒளியே விழியை
மறைத்தாலும்,
உலகே உதவ
மறுத்தாலும்,
வறுமை நோய்
வலைவிரித்தாலும்,
வாழ்வே
தொலைந்து போனாலும்,
நாங்கள்
அடிமையில்லை.

வேதம்
பகையேயானாலும்,
விடியல் தூரம்
போனாலும்,
நெடிய வானம்
உடைந்தாலும்,
நீலக் கடலே
சாய்ந்தாலும்,
நாங்கள்
அடிமையில்லை.

எதிரிகள்
மலையாய்க் குவிந்தாலும்,
இரும்புச் சிறையில்
அடைத்தாலும்,
உதிரம் அறுந்து
சிதைந்தாலும்,
உயிரே
பிரிந்து போனாலும்,
நாங்கள்
அடிமையில்லை.

## 15. உயர்ந்தவள்

தமிழ் மீது கொண்ட
தாகம் தணியாமல்
இமைப் பொழுதும்
சோர்வு இன்றி
ஏழிசையைத்
தேடுகிறேன்.

பழந் தமிழ்ப்
பாவெடுத்து,
பைந்தமிழின்
உணர்வெடுத்து,
இளந்தமிழில்
இசை தொடுத்து
இன்னிசையால்
வாழுகிறேன்.

சிந்துவெளி நாகரீகப்
பண்பாட்டில்
தமிழிருந்தாள்.
சிந்தையள்ளும்
சிலப்பதிகாரத்திலும்
அவள் இருந்தாள்.

முந்தையராம்
எந்தயரின்
மூச்செல்லாம்
நிறைந்திருந்தாள்.
முச்சங்கத் தேர் ஏறி
மூவுலகை
வென்று வந்தாள்.

முப்பாலில்
கலந்து வந்தாள்.
முக்கனியின்
தேன் சுவைத்தாள்.
எப்போதும் இயலிசையாம்
நாடகத்தில்
குடியிருப்பாள்.

பழமுதிர்ச்
சோலையிலே
பாட்டறைந்து
புகழ் வளர்த்தாள்.
உலகறிந்த
தத்துவத்துள்
ஒன்றியே
வளமடைந்தாள்.

காலமறிந்து
தன்னைக்
கனிவோடு மாற்றிடுவாள்.
புதுமை அறிவு கொண்டு
புவி எங்கும்
வாழுகின்றாள்.

## 16. வாவி மகள்

பல்லவி

வாவிக் கரை ஓரமெங்கும்
வந்து சிந்து பாடும் காற்றே!
வண்ண வண்ண பூங்காற்றே!
இங்கு
பாடும் மீன்கள் ஓடிவர
பாவலர்கள் கூடிவர
பண்பாடும் தேனாடே!
எங்கள்
பண்பாட்டின் தேன்கூடே!

சரணங்கள்.

முற்றத்திலே பூத்திருக்கும்
முத்து மல்லி ரோசாமேலே
முந்தானை தென்றல் விரிக்கும்!
இங்கு
அம்மானை பாட்டிசைக்க
ஆறு கடல் வாழ்த்தொலிக்க
அமுதமொழி தீர்த்தமாடுமே!
எங்கள்
தேனாட்டில் பண்பாடுமே!

மீன் குளிக்கும் வாவியிலே
நான் குளித்து நீந்தயிலே
நண்டு வந்து நாட்டியமாடும்!
இதைக்
கண்டு கண்டு மீனவனும்
காதல் வலைகொண்டுவீசி
காலங்களை வெல்லுவானே!
எங்கள்
தேனூறும் மீனாடே!

பாட்டரங்கத் தாமரை மேல்
வீற்றிருக்கும் பாவலர்கள்
பண்ணிசைக்கும் செந்தமிழ் நாடே!
இங்கு
வாகா போகா என்ற வார்த்தை
வந்து வந்து சந்தங்களில்
சொந்தங்களைப் பாராட்டுமே!
எங்கள்
மண் மரபை தாலாட்டுமே!

## 17. மனிதராவோம்

உலக
மொழிகளெல்லாம்
உடன் பிறப்பே,
–அதில்
உயிர் வாழும்
மானுடத்துள்
தமிழும்
ஒரு மகளே.

பார்க்கும்
திசைகளெல்லாம்
தாய்மைப் புரட்சியே.
–அவள்
பார்வை பட்ட
மாந்தருக்கு
பாரில்
உயர்ச்சியே.

இறை மொழிதான்
அனைத்துமிங்கு
மறைவு இல்லையே.
–கல்வி
அறிவறிந்த மாந்தருக்குள்
பகையே இல்லையே.

பூக்களின்
மென்மைதான்
மொழியின் சுகங்களே.
–அதைப்
புரிந்து கொண்ட
மாந்தருக்குள்
துன்பம் இல்லையே.

வானைப்போல்
நமது மனம்
விரிய வேண்டும்.
–கொம்புத்
தேனைப்போல்
நமது வாக்கு
இனிக்க வேண்டும்.

வளர்வதற்கு
பொருளறிவோம்
உலக மொழியிலே.
–உயிர்
வாழ்வதற்கு
பண்பறிவோம்
அன்பு நெறியிலே.

பிள்ளைகளாய்ப்
பிறந்தபோது
மொழிகள் இல்லையே.
–நாம்
பெரியவராய்
வளர்கையிலே
தொல்லை வந்ததே.

நல்லவராய்
வளர்ந்தோமானால்
உலகம் குடும்பமே.
–இதை
நமக்கு முன்பே
வாழ்ந்தவரும்
சொல்லிப்போனாரே.

## 18. வேண்டாம்

வன்முறையை
எள்ளளவும்
வளர்க்க வேண்டாம்.
வரலாற்றுப்
பாடங்களை
மறக்க வேண்டாம்.

பெண்ணின்
பெருமையை
குலைக்க வேண்டாம்.
பேரிறையை
வணங்காமல்
உறங்க வேண்டாம்.

பண்பறியா
மனிதரோடு
பழக வேண்டாம்.
படை பலத்தில்
வல்லவரை
எதிர்க்க வேண்டாம்.

இனப்பற்றை
மொழிப்பற்றை
இழக்க வேண்டாம்.
எதிரியையும்
மன்னிக்க
தயங்க வேண்டாம்.

பெருவீரம்
நுண்ணறிவை
துறக்க வேண்டாம்.
பெரியோரை
கனம்பண்ண
மறக்க வேண்டாம்.

புறத்தழகை
பார்த்து நீ
மயங்க வேண்டாம்.
புதியவரோடு
அறியாது
இணைய வேண்டாம்.

உறவுமுறை
தவறிப் பழி
சுமக்க வேண்டாம்.
உளத்தாலும்
இனவெறியை
போற்ற வேண்டாம்.

உறவுமுறை
தவறிப் பழி
சுமக்க வேண்டாம்.
உளத்தாலும்
இனவெறியை
போற்ற வேண்டாம்.

தூய நெறி
உடையவரை
இகழ வேண்டாம்.
தாய் மனதை
நோகடித்து
பேச வேண்டாம்.

வறியவரை
எளியவரை
வைய வேண்டாம்.
வகுப்புவாத
பேச்சுக்களை
ரசிக்க வேண்டாம்.

## 19. பாடுதமிழே

தமிழோடு
தென்றல் கூடிப்
பேசுதம்மா,
கவிதைச்
சந்தங்கள்
தாளம் போட்டு
ஆடுதம்மா.

பாட்டோடு
ராகம் வந்து
மயக்குதம்மா,
உலகப்
பரப்பெங்கும்
தமிழிசையே
கேட்குதம்மா.

சங்க இலக்கியமும்
தமிழ் கூறும்
நல்லுலகும்,
எங்கும்
இனிமையாய்
இன்றும்
வளருதம்மா.

பொங்கும்
கடலலைபோல்
புது எழிச்சி
புலர்ந்தாலும்,
எங்கள்
மொழியின்
இருப்பெல்லாம்
அறத்திலம்மா.

பாணர்களும்
புலவர்களும்
பாட்டாக
இயற்றிவைத்த,
ஏட்டுச்
சுவடி பல
எங்கெங்கோ
மறைந்ததம்மா.

தன்னலம் கருதாத
தமிழ் மொழியின்
சுருதியிலே,
பொன்னுலகம்
மகிழுதம்மா
புதுக் கவிதை
மலருதம்மா.

மன்னவரும்
விண்ணவரும்
வாழ்த்தி
வளர்த்த மொழி
என்றும் பிறர் வாழ
இசைத்தமிழாய்
இனிக்குதம்மா.

## 20. ஓர் உயிரின் ஓசை

தன்னலம் நோக்கிய
தமிழர் தலைவர்கள்
மண் நலம் காக்க
மறுபடி திருந்தாரோ.

மக்களை மண்ணை
மலடாகச் செய்தவர்கள்
சிக்கலில் மாட்டிச்
சிதறியே போகாரோ.

கழுத்தறுத்துக் கொல்லும்
உலுத்தர்கள் கூட்டத்தை
வெழுத்துத் துவைக்கவொரு
வேத வாக்கு கேட்காதோ.

புது யுகம் நோக்கி
புறப்படும் வாலிபர்கள்
இதுவரை நடந்த
இன்னலை மறப்பாரோ.

வண்ண எழில் சித்திரங்கள்
கண்ணெதிரே கருகியதை
காலம் எனும் தேவதை
கரை ஒதுக்கிவிடுவாளோ.

உடைப்பெடுத்தோடும்
உத்தமர் குருதி நீரை
அடைப்பதற்கிங்கேதும்
அருளாளர் இல்லையோ.

செஞ்சிலுவை ஏந்தி
தெருவெல்லாம் போதிக்க
நெஞ்சுரம் கொண்ட
யேசுநாதர் பிறக்காரோ.

உலகைப் பகைத்திருக்கும்
ஊத்தைக் காற்றுக்களால்
நிலவைப் பிடித்தணைக்க
நியாயங்கள் ஏதுமுண்டோ.

தர்க்கத்தில் மோதி
தமிழை வளர்க்காதவர்
சொர்க்கத்தில் ஏறியா
சுதந்திரம் தருவார்.

தென்றலைக்கூட
தீயாக நினைப்பவர்
குன்றத்தில் ஏறியா
கொடி போட முடியும்.

மெய்யாக தலைவர்கள்
வாழாத காரணத்தால்
பொய்யாகிப் போனது
பூமியின் விடுதலை.

வடக்குக் கிழக்கு எனும்
வரலாற்றுக் காயங்களை
சுகமாக்க முடியாமல்
துர்நாற்றம் வீசுகிறது.

கலைஞர்க்கு கவிஞர்க்கு
கைவிலங்கிட்டவர்கள்
இலைகள் உதிர்வதுபோல்
இருப்பையே இழக்காரோ.

கடல் நீரில் கரைந்த
கவிதைகள் பலதும்
உடல் கழுவி மீண்டும்
உயிர்ப்போடு பிறக்காதோ.

வாழ்வின் பொருளறிந்த
வளமான தத்துவத்தால்
எங்கள் நிலப் பரப்பில்
எழுப்புதல் நடக்காதோ.

## 21. சுனாமி

வெறியோடு வந்த
விரிகடல் அலைகள்
வீட்டினுள்
புகுந்ததம்மா.
மறையோர்கள்
புகழ்ந்த
மானிட உயிரை
பறித்தோடிச்
சென்றதம்மா.
உறையாத குருதி
உறைந்துபோய்
பிணங்கள்
ஊரெங்கும்
மிதந்ததம்மா.
சுனாமி
ஒரு பத்து நிமிடந்தான்
ஊருக்குள் புகுந்து
வெறியாடிப் போனதம்மா.

கன்னக்கோல் வைத்த
கருங்கடல் அரக்கன்
கரை தாண்டி
வந்தானம்மா,
எங்கள்
மண்ணிலே முளைவிட்ட
மரம் செடி கொடிகளை
முறித்தள்ளிப்
போனானம்மா.
இறைவனை நோக்கி
கதறிய மாந்தரின்
குரவலை
முறிந்ததம்மா.
சின்னஞ்
சிறியவர் உயிரைப்
பறித்திட நீயுமேன்
சினம் கொண்டு
எழுந்தாயம்மா.

## 22. இனம் காணுங்கள்

நெருப்பு விழி ஏந்தி ஏகி
நித்தம் போர் புரிந்த மண்ணில்
செருக்குடனே இன்றும் பலர்
சீவிக்கிறார் வெட்கமின்றி

திருக்குறள்போல் பேசுவதாய்
செப்புகின்ற தலைகளுக்குள்
உருப்படியாய் ஒன்றும் இல்லை
நெருக்கடிதான் நம்மவர்க்கு.

நாங்களென்ன அடிமைகளா
நாடோடிக் கூட்டங்களா?
வாங்கிய மூச்சை இறக்க
வரலாற்றையா தேடுவது?

வீங்கிய தோள்கள் எங்கே
விதிபடைத்த கரங்களெங்கே
தேங்கிய குட்டைக்குள்ளா
திருப்பலியை நடத்துவது.

புதுப் புது பாதைகளில்
போவதாக எண்ணிச்சிலர்
எதுகைக்கும் மோனைக்கும்
இலக்கணங்கள் தேடுகிறார்.

மதுமயக்கம் கொண்டவர்போல்
மாற்றி மாற்றிப் பேசுகிறார்
எது வரைக்கும் போராட்டம்
என்பதை நாம் அறியவில்லை.

வித்துவத் தமிழ் உணர்வை
வீழ்த்திய பெருமையெலாம்
சத்தியமாய் இவர்களையே
சாரும் என்று செப்புகிறேன்.

இத்தரையில் நம்மவர்க்கு
ஈடேற்றம் கிடைப்பதற்கு
முத்திரை பதிக்கும் நல்ல
முடிவுகளை எடுக்க வேண்டும்.

கத்தும் கடல் அலையை
கை நீட்டி அடக்க வேண்டும்.
மொத்தமாய் அறநெறியில்
மூச்செடுத்துயிர்க்க வேண்டும்.

கத்தி இன்றி இரத்தம் இன்றி
யுத்தம் ஒன்று செய்வதற்கு
புத்தி உள்ள மானிடரை
புலத்தில் நாம் தேடவேண்டும் .

## 23. இளமை

பனித்துளி பட்டு
மகிழ்ந்திடும் இலைபோல்
இனிமைகள் தொட்டு
மகிழ்வது இளமை.

கனவுகள் பாடும்
கவிதைகள் இளமை.
உணர்வுகள் பூத்து
உயிர்ப்பது இளமை.

துள்ளித்திரியும்
பள்ளிப் பருவம்.
துடிப்பாய் துணிவாய்
மோதும் பருவம்.

அழகின் முகப்பில்
அமைந்த வனப்பு.
ஆக்க வழியின்
ஊக்கம் இளமை.

தூக்கம் கலைந்த
ஊக்கம் இளமை.
துணிவாய்ச் சிரிப்பும்
களிப்பும் இளமை.

முதுமையில்கூட
இனிப்பது இளமை.
இனிமை இனிமை
இளமையே இனிமை.

## 24. பொங்கட்டும்.

புதிய அலைகள்
குமுறி எழுந்து
கரையில்
வந்து மோதும்.
மணலில் உள்ள
மேடு பள்ளம்
தகர்ந்து
சமமாய்ப் போகும்.

கிழக்கின் கதிர்கள்
கிளர்ந்து எழுந்து
அழுக்கின்
இருளைப் போக்கும்.
உரிமை இழந்து
வாழும் உயிர்கள்
புதிதாய்
மலர்ந்து ஓங்கும்.

மனிதம் தொலைந்த
மனிதர் குருதி
ஆறாய்ப் பெருகி ஓடும்,
மறுபடி அமைதி
மண்ணில் மலர
மகிழ்ச்சி
மனதில் பொங்கும்.

## 25. வாழும் இசை

இயற்கையில்
இன்பங்கள்
கூத்தாடுதே
நம்
இளமேனி
அதைப்பார்த்து
மகிழ்ந்தாடுதே.

உலகத்தின்
உள்ளத்தில்
ஒலி வாழுதே,
நம்
ஊர்களில்
தமிழோடு
இசை வாழுதே.

பிரபஞ்ச
பூதத்துள்
உயிர் வாழுதே,
என்
பேச்சோடும்
மூச்சோடும்
தமிழ் வாழுதே.

இலை மீது
பனி வீழ்ந்து
உறவாடுதே,
இங்கு
இரவுக்கும்
கவிதைக்கும்
மணமாகுதே.

நிலவோடு
முகில் வந்து
கதை பேசுதே,
இன்ப
நீரோடு
நீர் மோதி
மழையாகுதே.

பல வண்ணக்
கோலங்கள்
வான் போடுதே,
என்
பாட்டுக்கும்
எதிர்ப் பாட்டை
குயில் பாடுதே.

கடலோரம்
அலை வந்து
தாலாட்டுதே,
கலைக்
காற்றுக்கு
தேனாட்டில்
மீன் பாடுதே.

பறவைகள்
தேரேறிப்
பறக்கின்றதே,
நல்ல
பாசத்தை
ராகத்தில்
படைக்கின்றதே.

உலகெல்லாம்
அருள் ஜோதி
தெரிகின்றதே,
நம்
உள்ளத்தில்
இறை நீதி
மலர்கின்றதே.

மலையோரம்
சிறு பூக்கள்
சிரிக்கின்றதே,
நம்
மனதோரம்
அருள் வேதம்
ஒலிக்கின்றதே.

## 26. மீன் பாடும்

**பல்லவி.**

சின்னச் சின்ன குருவிகள்
சிந்து பாடும் தேனாடு
கொஞ்சி கொஞ்சி
சலங்கைகள்
கூத்தாடும் திரு நாடு
எங்கள்
மீன்பாடும் தேனாடு
மட்டு
மாநகரே பண்பாடு.

**சரணங்கள்.**

ஏலேலோ போடுதம்மா
அலைகள் –ஆற்றில்
எதிர் நோக்கி
ஏகுதம்மா வலைகள்
காலத்தை வெல்லுதம்மா
கலைகள் – வெற்றிக்
கனிதள்ளும் எங்கள் ஊர்
வயல்கள்
தாலேலோ கேட்டுறங்கும்
தளிர்கள் – தமிழ்த்
தாய் மடியில்
பூக்குதம்மா மலர்கள்.

எழுவானில் கதிரவன்
சிரிப்பான் – ஏழை
எளியோர்க்கு புதுவாழ்வு
கொடுப்பான்
படுவானில் வண்ணங்கள்
தரிப்பான் – புதுப்
பாட்டுக்கு மெட்டுக்கள்
தொடுப்பான்
வளவாழ்வை அனைவர்க்கும்
அருள்வான் – இங்கு
வந்தோரை
வாழ்த்தி வரவேற்பான்.

## 27. விடியலைத் தேடி

பாடும் பறவைகள்
பாடி மகிழ்ந்திட
பாதை அமையவேண்டும்.

தேடும் சுதந்திர
வேட்கை தணிந்திட
தெய்வம் உதவவேண்டும்.

தோன்றும் கதிரவன்
தூய கதிரினால்
நம்மை ஆளவேண்டும்.

மூன்று தமிழிலும்
வாழ்ந்த பெருமையை
மீண்டும் வரைய வேண்டும்.

தாகம் தணிந்திட
தமிழர் இணைந்திட
நீதி நிலவ வேண்டும்.

வீதிக்கு வீதியிங்கு
வித்துவத் தமிழின்
ஜோதி தெரியவேண்டும்.

பாதி வழிகளில்
வந்த சாதியை
மோதி அழிக்க வேண்டும்.

ஆதித் தமிழரின்
நீதிக் கதைகளை
ஓதி உணர்த்த வேண்டும்.

ஊரின் பெருமையை
உணர்ந்து நித்தமும்
உயர்ந்து வாழவேண்டும்.

பாரில் நமக்கொரு
பண்பு இருப்பதை
படித்து உணர வேண்டும்.

## 28. வளநாடு

பச்சை வயல்
ஊர் மனையை
சுற்றி வரும் வாவி.

பாட்டு வலை
தாண்டிக் கவி
பாடி வரும் கூனி.

நீலக் கடல்
அலை தழுவி
கழுவுகிறாள் மேனி.

நீர் வழிந்து
மகிழ்ந்து செல்லும்
பூமி எங்க பூமி.

புல் தரையில்
கால் பதித்து
போகு மொரு தென்றல்.

புத்தம் புது
அபினயத்தில்
பூப் பறிப்பார் பெண்கள்.

பட்டி தட்டி
தாளக்கட்டை
கொட்டி வரும் மேளம்.

கட்டித் தயிர்
ஆடை போலே
கபடறியா தேசம்..
கயவர் வந்து
கொல்லுகிறார்
இது என்ன கோலம்.

## 29. முழுகாத நிலவு

முந்தநாள் இரவு
முழுகாத நிலவு
முந்தானை விரித்து
மூடிநாள் கதவு.
சந்தன வதனம்
தமிழோடு கோபம்
சங்கீத சுரமே
ஏன் இன்னும் மௌனம்.

அழகான மலரே
அமுதான உறவே
எழுதாத கவியே
இறை ஞானக்கொழுந்தே
இன்பமும் நீயே
இனிமையும் நீயே
நீ இல்லை என்றால்
நான் இல்லை நிலவே.

அடிவானக் கடலும்
தாலாட்டும் போது
அழகான மலரும்
உனைத் தேடும்போது
பிடிவாதம் செய்து நீ
பேசாது போனால்
பெருவாழ்வு கருகி
போகாதோ உன்னால்.

வான் பூத்த நிலவே
வாராது போனால்
தேன் பூத்த இதழும்
தீயாகிப் போகும்.
மான் பூத்த விழியை
காணாது போனால்
தேன் சிந்தும் வானை
யார் பார்ப்பார் நிலவே.

## 30. புது வாழ்வு

பொழுது புலருமடா தம்பி
பூந்தளிர்கள் மலருமடா தம்பி
எழுது கோல் உயருமடா தம்பி
எதிர்ப்பலைகள் ஓயுமடா தம்பி.

அழுததெல்லாம் போதுமடா தம்பி
அன்புடமை வெல்லுமடா தம்பி
உழுத கை ஓங்குமடா தம்பி
உறவுக்குக் கை கொடடா தம்பி.

நிலவில் ஏறி நடந்திடடா தம்பி
நீலக்கடல் உடைத்திடடா தம்பி.
உலக வலம் சென்றிடடா தம்பி
உயிர் மானம் காத்திடடா தம்பி.

காலம் நம்மைக் காக்குமடா தம்பி
கருணை மழை பொழியுமடா தம்பி.
ஞாலம் கை கொடுக்குமடா தம்பி
நம்பிக்கையே வாழ்க்கையடா தம்பி.

அறம் உயரப் பாடுபடு தம்பி
அகம் குளிர முகமலர்வாய் தம்பி
திறன் அறிந்து சேர்ந்திடடா தம்பி
திருக்குறளில் வாழ்ந்திடடா தம்பி.

வறுமைத் துயர் போக்கிடடா தம்பி
வரலாற்றில் நிலைத்திடடா தம்பி
பொறுமை அன்பு காத்திடடா தம்பி
புது வாழ்வை அடைந்திடடா தம்பி.

## 31. நேசக்கரம் விரிப்போம்

**பல்லவி**

வாசமுள்ள பூவு
நம்ம
தேசமெங்கும் இருக்கு.
வீசும் இளம் காற்றும்
நம்ம
வாசல் வந்தே இருக்கு.
நேசக்கரம் விரித்தே
உறவை
யாசிப்போம் வாறியளா.
உறவை
யாசிப்போம் வாறியளா.

சோகமெனும்
துயர் துடைத்து
சொல்லுங்க ஆறுதல.
தாகம் தணிந்திடவே
அன்புத்
தண்ணீரை வாத்திடுங்க.
தேகம் எரிந்து
போகுது ராசா
தீய அணைத்திடுங்க.
இந்தத்
தீய அணைத்திடுங்க.

பூமியில் ஏதுகுற
நாம
புரிஞ்சி நடந்திடல.
சாமிக்குள் ஏதுவினை
நாம
சாதிய விட்டதில்ல.
காலங் கடந்து
போகுது ராசா
காதலித்துப் பாருங்க
மானிடத்தை
காதலித்துப் பாருங்க.

மொழிகளில் ஏதுபிழை
நாம
அழகியலை படித்ததில்லை.
அழிவுகளை நடத்தாமலே
நாம
அரசியலை பரப்பவில்லை.
பாசம் மரித்து
போகுது ராசா
வேசம் கலைத்திடுங்க
மக்கள்
வேதன போக்கிடுங்க.

## 32. தேகமெரியுது

மோகனம் பாடிய
முழுமதி வானை
மேகங்கள் மூடியதே.
கோபமே அறியா
கோயில் மலரின்
தேகம் எரிகின்றதே.

அமைதியைத் தேடி
அலைந்திடும் மனிதா
இயற்கையின்
முகத்தைப் பார்.
சுமைகளை மறந்து
கனிகளைச் சுமந்த
மரம் செடி
கொடிகளைப் பார்.

நறு மணம் வீசும்
சிறு மலர் வதனம்
சிரித்திடும் அழகைப் பார்.
பொறுமையும் அன்பும்
பூத்துச் சொரியும்
பூமியின் நிறங்களைப் பார்.

வெறுமையாம் வானில்
விந்தைகள் புரியும்
சந்திர மதியைப் பார்.
வறுமையைப் போக்கும்
திறமையை உடைய
வயல்வெளி நோக்கிப் பார்.

இயற்கையில் இருக்கும்
இன்பத்தை உனது
இதயத்தில் இருத்தியே பார்.
முயற்சி உடையது
எழுச்சி அடைவதை
உயர்ச்சியாய் எண்ணிப் பார்.

## 33. பரதம்

பரத மகள் கரணமிடும்
தருணம் இதுவோ
திரு நடனம் சிவனடியில்
சரணம் அல்லவோ
மரணங்களை கடந்த இறை
நடனம் அல்லவோ
மாதவளும் மலரவனும்
கலந்த முகமல்லவோ...

ஜதியில் எழும் சுதியில்
குதிகள் விளையாடும்.
விதிவரையும் உணர்வில்
விழிகள் அசைந்தாடும்.
கருமை நிற மேகக்
கூந்தல் கலைந்தாடும்.
கைவிரல்கள் அலைபோல்
வளைந்து வளைந்தாடும்.

கீழுதடு மேலுதடில்
கீறல்களைப் போடும்.
கேள்விக்கு பதில் கோடி
மௌன மொழி பேசும்.
மன்மதனை வீழ்த்த
மா புருவம் அசையும்.
மா மலையும் அதிர
மணிச்சலங்கை முழங்கும்.

கரும்பான தோளிரண்டும்
கவிதை மொழி பேசும்.
கழுத்தோடு தலை பின்னி
காற்றாக அசையும்.
தாமரைப் பூவாய்
தங்க முகம் சிவக்கும்.
தரையில் பல நிலவாய்
பல் வரிசை ஜொலிக்கும்.

பொந்திருந்து நண்டுகளைக்
கொண்டு வரும் முளங்கால்.
புன்னை மரம் கீழ் அன்னம்
போலசையும் இடையாள்.
ஆலிலையின் மேலுலகு
அரும்புகின்ற வயிறாள்.
ஆதிசிவன் ஆற்றலினை
காட்டிடுவாள் நெஞ்சால்.

## 34. ஈடேறுமா

தேனாட்டில் மீன்பாட
நாளாகுமா?
சேயோடு தாய்சேர
வழி தோன்றுமா?
நான் பாடும் பூபாளம்
அரங்கேறுமா?
நாளாகுமா?
வெகு நாளாகுமா.?

புயலுக்கு பூமாலை
அலங்காரமா?
புகழ் தேடும் பதவிக்குள்
சமாதானமா?
இரை தேடும் முதலைகள்
பசிதாங்குமா?
இளந் தென்றல்
உயிர்வாழ களமேதம்மா?

பனி மூடும் பகல் நேர
இருள் நீளுமா?
பகலோனின் கதிர்வந்து
எனையாளுமா?
கனி தள்ளும் நிலம் வாழ
பகை மாழுமா?
கண்ணீரும் செந்நீரும்
விடை காணுமா?

## 35. என்னை மீட்டவா

மனமென்னும்
திருக்கோயில்
உனக்காக திறந்தது
இறையே நீ
எழுந்தோடி வா

அலைபாயும்
புதுவெள்ளம்
கரைதேடி அலையுது
அன்பே என்
இறைவா
நீ வா

வரம் வேண்டி
உனைப் பாடி
வருகின்ற மகனுக்கு
வரம் கோடி
தரவே நீ வா.

இரவோடு பகல்கூடி
இசைபாடும் கவிதைக்கு
பொருளாக
இறைவா நீ வா.

உலையேறிக்
கொதிக்கின்ற
உள்ளத்தின் துயரத்தை
உடன் போக்க
இறைவா நீ வா.

எனக்குள்ளே
ஒலிக்கின்ற
இனிப்பான குரலுக்குள்
இறையே நீ
இருப்பாக வா.

பனிக்காலம் வந்தாலும்
பசிதாகம் எடுத்தாலும்
உனக்காக
வாழ்வேன் அய்யா.

மணி தீபம் ஏற்றி
உயிர் மீது காட்டி
எனை நானும்
தந்தேன் அய்யா.

பூங்காவில் நானும்
தேன் காவி வந்தேன்
தெய்வமே
எனைப் பார் அய்யா.

பூஜைக்கு நானும்
பூமாலை தொடுத்தேன்
புதுமையை
எனக்காகச் செய்.

இளந் தென்றல்
எனைத் தேடி
என்னாளும்
வரும்போது
உன்பாதம்
பணிவேன் அய்யா.

அன்பெனும்
வீணையில்
என் கரம்
தொடுக்கின்றேன்
அன்பே என்
இறையே நீ வா.

## 36. சொல்லுங்கள்

பள்ளத்தாக்கின் நீளமே
பனி படர்ந்த மேகமே
துள்ளி ஓடும் மின்னலே
தூய வான் கதிர்களே
நில்லுங்கள் நில்லுங்கள்
நீதிக் கண் திறவுங்கள்.

பூத்திருக்கும் செடிகளே
பூவரசம் இலைகளே
காற்றிலாடும் கொடிகளே
கமுக மரக் குலைகளே
சொல்லுங்கள் சொல்லுங்கள்
சுதந்திரத்தைச் சொல்லுங்கள்.

## 37. ஓய்வு இல்லை

பாரங்களைத்
தூக்கவைக்கும்
பகலுக்கும்
ஓய்வு இல்லை.

ஈரங்களை
சுமந்து நிற்கும்
இரவுக்கும்
தூக்கம் இல்லை.

மரணத்தை
கடந்து செல்ல
மனிதருக்கும்
முடியவில்லை.

உருவங்களை
பதிக்காமல்
உயிர் போக
நினைத்ததில்லை.

கருவறையில்கூட
இந்த
உறவுகளால்
பெரிய தொல்லை.

வன்முறையை
தூண்டுகின்ற
மனிதரின்னும்
மடியவில்லை.

மண்ணிலொரு
நிமிடம் கூட
மரணப் போர்
முடிந்ததில்லை.

வறுமையின்
கொடுமையினால்
வாடுவோர்க்கும்
கணக்கில்லை.

பொறுமையோடு
அமைதி தேடும்
பூக்களுக்கும்
பஞ்சமில்லை.

உரிமை என்ற
போரில் வெறி
உலகை விட்டு
போனதில்லை.

அமைதியின்னும்
கிடைக்கவில்லை
அழுகை ஓய்ந்து
போனதில்லை.

## 38. அமைதி விழா

வானமெங்கும்
மேகமெல்லாம்
ஊர்வலங்கள் போகுதே,
வசந்த காலம்
வந்ததென்று
தென்றல் தூது சொன்னதே,
தேனளந்த
பூக்களெல்லாம்
தினம் மாலை சூடுதே,
தேசமெங்கும்
அமைதி பூக்க
தெய்வ வரம் வேண்டுமே.

பச்சை வண்ணம்
பூமியெங்கும்
பாய் விரித்துத் தூங்குதே,
பாடும் மீன்கள்
பால் நிலாவை
பார்த்து நடம்மாடுதே,
கச்சை கட்டி
நீர் இறைப்போர்
கவி அமுதாய் இனிக்குதே,
கால போகம்
குடலை தள்ளி
களனி வயல் சிரிக்குதே,

இன்ப ஞான
தீப ஜோதி
இருளகற்றி வென்றதே
துன்பமென்னும்
சுமைகள் நீங்கி
தோணி ஆற்றில் போகுதே
மங்களங்கள்
எங்குந்தங்க
மனித நீதி உயர்ந்ததே,
பொங்கும் அன்பின்
புனித நீரால்
புதிய பூமி நனையுதே

## 39. ராசாத்தி

நேத்துவர தூக்கம்
கெட்டுப் போச்சு,
என்
நெஞ்சுக்குள்ள
பாரமேத்தி ஆச்சி.
காத்து வாங்கும்
மூச்சிலும்
அவள் பேச்சு,
அந்தக்
கார்குழலாள் பேர்தான்
மீனாட்சி.

பூவலுக்க தண்ணி
அள்ளப் போறவளே,
என்
ஆவலைத் தூண்டியதுன்
பின் அழகே.
காவலுக்கு நான் வரவா
தாமரையே,
என்
காதலுக்கு சம்மதம் நீ
சொல்லவில்லையே.

கோயிலுக்கு பூச்சுமந்து
போறவளே,
உன்
கூந்தலுக்குள் மயங்கியது
என் மனதே.
ஆயிரம் ஆசைவந்து
மோதுகிறதே,
என்
ஆவி மட்டும்
உன்னைச் சுற்றி ஓடுகிறதே.

எண்ணத்தில் தீ மூட்டிப்
போகிறவளே,
உன்
இதயத்தில் குடியேற
முடியவில்லையே.
பெண்மையில் மயங்காத
ஆணில்லையே,
எப்
பிறவியிலும் உன்
நினைவு போவதில்லையே.

## 40. தாலாட்டு

ஆராரோ ராகம்
தாலாட்டுப் பாடும்.
அன்பென்னும் தேரில்
அறிவூஞ்சலாடும்.
மெய்ஞானத்திடலில்
விளையாடு கண்ணே.

வானோர்கள் கீதம்
நீ பாட வேண்டும்.
தேனூறும் கவிகள்
மொழியாக வேண்டும்.
தேவனின் துணையோடு
நீ வளர வேண்டும்
திருமறை போற்றும்
மகளாக வேண்டும்..

புதுமைகள் யாவும்
நீயாக வேண்டும்.
பூவுக்கும் சேதி
நீ சொல்ல வேண்டும்.
தாயோடு தந்தையின்
பேர் வாழ வேண்டும்.
தலைவியாய் உலகை
நீ ஆளவேண்டும்..

## 41. தொலைகின்றது

பூமியின் வயதோ
முதிர்கின்றது.
பூவின் இதழோ
உதிர்கின்றது.
போரில் உலகம்
அதிர்கின்றது.
உன்
புகழால் அமைதி
தொலைகின்றது.

விரிந்த வானம்
சிரிக்கின்றது.
விண்ணில் அமைதி
தெரிகின்றது.
சரிதை மறைந்து
சரிகின்றது.
நம்
சமூகவாழ்வே
தொலைகின்றது.

இரவும் பகலும்
வருகின்றது.
இயற்கை இறையில்
நனைகின்றது.
ஏழ்மை வறுமை
ஏன் வந்தது.
உன்
இதயம் தொலைந்து
ஏன் போனது.

வலிய கரங்கள்
ஆள்கின்றது.
வார்த்தை தவறி
வாழ்கின்றது.
அழகின் முகங்கள்
சிதைகின்றது.
நம்
அமைதி மண்ணில்
தொலைகின்றது.

## 42. கலை மகள்

ஏழு சுரம்
பாட வந்த
இனிய தமிழ் நீ.

இசை மழையில்
நனைந்திருக்கும்
இன்னமுதம் நீ.

தென்றல் போல்
சுகராகம்
தந்த மகள் நீ.

தேன் அருவிபோல்
உலகில்
கலந்த மகள் நீ.

புனிதமான
நதிக்கரையில்
பூத்த மலர் நீ.

பூங்கவிதை
பாட வந்த
கலை மகளும் நீ.

மனிதம் எனும்
பொறுமை காத்த
மாமணியும் நீ.

மரகதப் பொன்
வீணையீந்த
மணிக்குரலும் நீ.

இனிதான
எளிமைக்குள்
இருந்த மகள் நீ.

இறையன்பில்
தினம் வாழ்ந்த
குலமகளும் நீ.

உண்மைக்காய்
குரல் கொடுத்து
ஒளியானாய் நீ.

ஒவ்வொரு
பாட்டினுள்ளும்
உயிரானாய் நீ.

அன்னையின்
திரு வடியில்
அமர்ந்துள்ளாய் நீ.

அனைவரின்
விடிவுக்காய்
அருள் தருவாய் நீ.

பண்பட்ட
அறிவினுக்குள்
மகிழ்ந்திருந்தாய் நீ.

பகை வந்த
போதெல்லாம்
பொறுத்திருந்தாய் நீ..

பண்பட்ட
மனிதர்க்கு
ஆறுதலும் நீ

## 43. நீயா நானா

ஆயிரம் இருக்குதடா
நெஞ்சுக்குள்ளே,
அதன்
ஆரம்ப சொல்தான்
கிடைக்குதில்லையே.

எழுதும் போது
வருகுதடா
ஏராளமாய்,
உன்னை
எதிரில் கண்டால்
தொலையுதடா
வீரமெல்லாம்..

பொழுது படும்
நேரமெல்லாம்
ஒரு சோகம்,
ஏதும்
புரியாமல்
எரியுதடா
என் தேகம்.

கண்ணுக்குள்
தெரிகின்றது
என் தாகம்.
அதைக்
காண்பிக்க
மறுக்கின்றது
தன் மானம்.

உள்ளத்துள்
உள்ளதெல்லாம்
நீதான்.
உனக்கு எப்படி
விளக்குவேன்
அதை நான்.

இணையாத
இரு கோடுதானா?
நாம்
இருவரும்
சிரிப்பது வீணா?

எத்தனை தடவைகள்
கதைத்தோம்.
அவை அத்தனையும்
பொய்தானா?

உண்மையை
உடைப்பது யார்?
உனக்கும்
துணிவு இல்லை
எனக்கும்
துணிவு இல்லை
கனவாய்ப்
போனதே காலம்.

## 44. வள நாடு

**பல்லவி**

இயற்கை எழில் கொஞ்சும்
கிழக்கிலங்கை மண்ணில்
என்ன குறை உண்டு
இதயத்தை உயர்த்து

**அனுபல்லவி**

நீர் வளமும்
நில வளமும்
நெல் வளமும்
உண்டு.
கல் வனமும்
கடல் வனமும்
கான் வனமும்
உண்டு.
நெய்தலும் மருதமும்
முல்லையும் உண்டு.
பாலையும் குறிஞ்சியும்
ஐந்து நிலம் உண்டு.

**சரணங்கள்**

மென்தென்றல்
வந்தெங்கள்
மேனியைத் தழுவும்.
கற்பனைப் பறவைகள்
கவித்தேரில் பறக்கும்
நிலம் செழித்து
வளம் கொழித்து
நிறைந்ததெங்கள் பூமி
மனம் களைத்து
முகம் சுழித்து
மாழ்வதேன் மனிதா.

காற்றுக்கோர் வசந்தம்
கடலிலே கிடைக்கும்.
பாட்டுக்கு பல மெட்டு
படகேறி இறங்கும்.
உடல் வளைத்து
தினமுழைத்த
உத்தமஉகள் பூமி.
மனம் களைத்து
முகம் சுழித்து
மாழ்வதேன் மனிதா.

நான்மறை கீதங்கள்
நம் காதை நிறைக்கும்.
மீன் பாடும் பாடல்கள்
தேனாய் இனிக்கும்.
வித விதமாய்
உணவளித்து
விருந்தோம்பும் பூமி.
மனம் கனிந்து
முகமலர்ந்து
வாழ்த்திசையைப் பாடு.

## 45. அமைதியைத் தேடி

அமைதியில்லாமல்
அலைந்தேன் நானே
அடைக்கலமும்
என் பலமும் நீயே
அன்பே என் இறைவா
ஆறுதல் நீயல்லவா

அமைதியைப்
பழிக்கும்
மனிதர்களின்
ஆலோசனைகளைக்
கேட்பதில்லை
இரத்தப் பலியின்
போர்க் களத்தை
என் விழி பார்த்து
ரசிப்பதில்லை

எந்நேரமும்
என் கண்முன்
என்னோடு
இருக்கின்றார்
என் தீபமும்
என் ஜீவனும்
என்னோடு
இருக்கின்றார்..
பயமில்லை
பாதை நீளத்
தெரிகின்றது
அமைதியின் பாதை
தெரிகின்றது
அழகாய் பயணம்
தொடர்கிறது.

வாழ்வுக்கு
பொருள் சொல்லி
வழி காட்டினார்
தோள் மீது
எனைத்தாங்கி
சுகமாக்கினார்
பாதை தெரிகின்றது
பயணம் தொடர்கின்றது.

சத்தியமும் ஜீவனும்
சாவதில்லை
தர்மம் ஜெயிக்கின்றது
பாதை தெரிகின்றது
பயணம் தொடர்கின்றது

## 46. வாவிக்கரை

வாவிக்கரை
தொட்டுவரும்
வசந்தமே வா,
காதல்
வார்த்தைகளைப்
பேசிடுவோம்
கனிமொழியே வா.

நாவினிக்கும்
தென்மோடி
நாதமே நீ வா,
என்
காதினிக்க
அலை தழுவி
கரை ஓடி வா.

தண்ணியள்ளப்
போனவளே
தாகம் தீர்க்கவா,
இளம்
கன்னி உன்னைக்
காண வேண்டும்
காதல்
கொள்வோம் வா.

சாவியில்லாப்
படலையிது
தள்ளி
உள்ளே வா,
கவிச்
சாராயம்
நான்தருவேன்
போதைகொள்வோம் வா.

வட்டக்
களரி ஏறி
கூத்தாடுவோம் வா,
நம்
வண்ண உடல்
தாளக் கட்டில்
வயப்படட்டும் வா.

அலை தவழும்
கடல் நீரை
மொண்டு
கொண்டு வா,
தென்னை
இளநீரை
குலை குலையாய்
தள்ளிவிட வா.

தூங்காமல்
பாட்டிசைக்கும்
கவியழகே வா,
பெண்கள்
சுவையாக
தாலாட்டும்
இன்னிசையே வா.

சின்ன இடைக்
கன்னியைப்போல்
சிரித்தசைந்து வா,
என்
சிந்தை அள்ளிச்
செல்லுகின்ற
மழலையாக வா.

எப்போதும்
பண்பாட்டை
பாராட்டிட வா,
நாட்டில்
முப்போகம்
விளைகின்ற
வளம்
நிறைத்துத் தா.

அமிர்தகழி
நீர்ச் சுனையின்
இருப்பாக வா,
எங்கள்
ஆவி குடி
கொள்ளுகின்ற
ஆத்மாவே வா.

நீண்ட வரலாறு
கொண்ட
நிலமகளே வா,
உலகில்
நீரால்
பெருமைகொண்ட
தேனாடே வா.

## 47. காலைப் பொழுது

அதிகாலைப்
பொழுதொன்று
அழகாக
மலர்ந்தின்று
புதிதாக
எனைப் பார்த்ததே,
பூந்
தமிழ் பாட
எனைக் கேட்டதே.

எனக்கு என்ன
பிணக்கு என்று
என் வீட்டுப்
படியேறி
மனக் கோயில்
திறக்கின்றதே,
வான்
மணக்க ஒரு
கவி தந்ததே.

விழியோரம்
ஒளி வந்து
விடிவென்ற
அருள் தந்து
எளியோனை
வரவேற்றதே,
என்
எதிர்காலம்
வெளிக்கின்றதே.

ஆகாயத்
தரை நீந்தும்
அருள் ஜோதி
ஒளி ஈந்து
காயாமல்
காய்கின்றதே,
செந்
தளிர் மேனி
புலரகின்றதே.

தெருவெல்லாம்
பூபாளம்
தினப் பூசை
அபிசேகம்
தீராத
பகை தீர்ந்ததே,
பழி
தீர்க்கின்ற
மனம் மாண்டதே.

புவி மீது
கதிர் வந்து
புது வீர
சுரம் தந்து
விதியென்ன
விதியென்றதே,
நின்
மதி வாழ
மதி தந்ததே.

ஒரு வானம்
ஒரு தீபம்
ஒரு ஜாதி
ஒரு நீதி
ஒரு வேதம்
உலகென்றதே,
அன்பால்
உயிர்ப்பது
உறவென்றதே.

## 48. புதுப்பிறப்பு

கண்ணுக்குள்
மின்னல் கோடி
தாக்க வேண்டும்.
கவிதையென்னும்
தீ பிடித்து
எரிய வேண்டும்.

எண்ணமெல்லாம்
வண்ண நீரில்
நனைய வேண்டும்.
இருதயத்தில்
இன்னுமொரு
துடிப்பு வேண்டும்.

மண்ணுலகை மாற்ற
புதுக்
கலைஞர் வேண்டும்.
மரணமற்ற
புதிய வாழ்வில்
நுழைய வேண்டும்.

வானோடும்
மண்ணோடும்
மகிழ வேண்டும்.
மாலையிளம்
தென்றலுக்குள்
இணைய வேண்டும்.

தேனூறும்
ஆழ் கடலில்
மூழ்க வேண்டும்.
தித்திப்பின்
பெருக்கத்தில்
மயங்க வேண்டும்.

குறைவற்ற
நிறை வாழ்வு
வாழ வேண்டும்.
கோடி கோடியாய்க்
கவிதை
புனைய வேண்டும்.

சிறைக் கதவை
உடைத்து நீங்கள்
பறக்க வேண்டும்.
சிந்தனையில்
கற்பனைத் தேர்
பூட்ட வேண்டும்.

காதலர்க்காய்
காவியங்கள்
பாட வேண்டும்.
காலமெலாம்
கனிந்த கனி
சுவைக்க வேண்டும்.

உண்மையின்
மடியில் நீங்கள்
உறங்க வேண்டும்.
ஒவ்வொரு
வினாடியையும்
ரசிக்க வேண்டும்.

பிறப்பின்
பலனை நீங்கள்
அடைய வேண்டும்.
பிறிதொரு
உலகை நீங்கள்
காண வேண்டும்.

சோதனைக்
கடலையே
கடக்க வேண்டும்.
சொர்க்கத்தை
மண்ணுலகில்
படைக்க வேண்டும்.

## 49. மரணம்

ஏற்றிவைத்த
தீபங்களும்
அணைந்து போகும்.
போற்றிப் புகழ்
சேர்த்ததுவும்
மறைந்து போகும்.
நல்லவர்க்கும்
தீயவர்க்கும்
மரணம் வரும்.
நரகத்தையும்
சொர்க்கத்தையும்
யார் காணக்கூடும்.

படிப்பறையில்
கற்றதெல்லாம்
மறந்து போகும்.
படை நடத்தி
வென்றவர்க்கும்
தோல்வி வரும்.
தேடிவைத்த
திரவியமும்
அழிந்து போகும்.
தெருத் தெருவாய்
காலன் உன்னைத்
தேடிக் கொல்லும்.

கொன்றவரும்
வென்றவரும்
வீழ்ந்து போவார்.
கோயில் கட்டி
வாழ்ந்தவரும்
மறைந்து போவார்.
அன்பையள்ளிச்
சொரிந்தவரும்
வெறுத்துப் போவார்.
அனைவருக்கும்
மரணம் வந்தால்
எங்கு போவார்.

பூவுதிரக்
காயுதிரக்
கனியும் உதிரும்.
நாவுக்குள்
இனித்ததுவும்
நஞ்சாய்ப் போகும்.
தாவி வரும்
தென்றல்கூட
பகையாய் மாறும்.
தடையுடைத்து
அனைவருக்கும்
மரணம் வரும்.

திண்டதுவும்
குடித்ததுவும்
முடிந்து போகும்.
தினப் பயிற்சி
செய்த உடல்
சரிந்து போகும்.
புண்ணியத்தை
சேர்த்தவர்க்கும்
மரணம் வரும்.
பொதுத் தீர்ப்பு
அனைவருக்கும்
எப்போ வரும்.

வாழ்வுக்கு
பொருள் கோடி
யார் சொல்வது.
வரலாற்றில்
நிலைப்பதற்கு
யார் வாழ்வது.
இணைப்பதற்கும்
சேர்ப்பதற்கும்
என்ன இருக்கிறது.
எல்லோருக்கும்
மரணம் மட்டும்
முடிவாய் இருக்கிறது.

எண்ணங்களும்
ஆசைகளும்
அழிந்து போகும்
இறப்பு எனும்
விதியை மாற்ற
எவரால் கூடும்.

நேற்றிருந்தார்
இன்று இல்லை
நீரலைதான் வாழ்க்கை.
காற்றடைத்த
பையுடைந்தால்
கனவுதான் வாழ்க்கை.
மாற்றமென்ற
ஒன்றுக்குள்
மாறிவிடும் வாழ்க்கை.
மரணம் மட்டும்
நம்மை எல்லாம்
அழைப்பதுதான்
உண்மை.

பிறக்கும்போதே
இறப்பின் புதிர்
எழுதப்படும்,
ஆனாலது
எங்கே
எப்போது
எப்படி என்பது
மறைக்கப்படும்..

## 50. கன்னித்தமிழ்

சின்ன இடைக்
கன்னி எழில்
செந்தமிழால்
நடந்தாள்

வண்ண வண்ண
ஆடை கட்டி
வண்டமிழால்
வந்தாள்.

எண்ண எண்ண
இனிக்கின்ற
இன்பமெல்லாம்
தந்தாள்.

விண் அதிரக்
கவிதை பாடி
வீர நடை
நடந்தாள்.

அன்பென்னும்
அறக் கடலில்
அழகு நடம்
புரிந்தாள்.

ஒன்றேயொன்று
உலகமென்ற
ஒற்றுமையைத்
தந்தாள்.

துன்பமெனும்
சாகரத்தை
வென்று விடிவு
தந்தாள்.

என்றென்றும்
குன்றிடாத
இளமையோடு
இருந்தாள்.

மூன்று தமிழ்
என்ற கலை
தோன்ற வழி
செய்தாள்.

அன்னையெனும்
பண்பலையில்
நின்று புகழ்
அடைந்தாள்.

## 51. அறிவின் அதிசயம்

ஒளியின் வழியைத்
தேடித் தேடி
உனது பயணம்
தொடர வேண்டும்.

இருளைக் கிழிக்கும்
அறிவுத் தூணை
ஏற்பவர் கண்ணில்
கருணை வேண்டும்.

அறிவுத் திறனால்
உழைத்து உயரும்
ஆற்றலின் பெருமை
அறிய வேண்டும்.

கண்ணின் கருவிழி
கடக்கும் தொலைவை
காண உனக்கு
ஞானம் வேண்டும்.

அறிவுக் கதிர்கள்
அகன்று விரிந்து
அகிலப் போக்கை
அளக்க வேண்டும்.

செவ்வாய்ப் பரப்பின்
சிறப்பை அறிந்து
சென்று வாழத்
துணிய வேண்டும்.

நீலக் கடலை
உடைத்துக் கிழித்து
நித்தம் முத்துக்
குவிக்க வேண்டும்.

கற்பனை அறிவின்
அற்புதம் கண்டு
களத்தில் புதுமை
காண வேண்டும்.

உலகின் இருளை
அறிவின் ஒளியால்
விலக்கித் துலக்கி
அளக்க வேண்டும்.

இயந்திர உலகம்
விரிந்து விரிந்து
இளையோர் வழியை
இயக்க வேண்டும்.

அறிவின் ஆற்றல்
பெருகப் பெருக
இருளின் இருப்பிடம்
மறைந்து போகும்.

பணத்தைத் தேடிக்
குவிப்பது போலே
அறிவைத் தேடி
அலைய வேண்டும்.

அறிவைப் பகையாய்
வெறுப்பவன் மனதில்
அருளின் ஜோதி
கலைந்து விடும்.

அறிவின் அதிசயப்
போக்கை உணர்ந்தால்
அகிலம் உனக்கே
அடிமை ஆகும்.

## 52. எல்லாம் இருந்தது

பிறப்பும், இறப்பும்,
சிரிப்பும், அழுகையும்
பெரிதாய் என்றும்
நடப்பவை தான்

நாங்கள் போடும்
கோலம் அனைத்தும்
முன்பே பதிவில்
இருந்தவைதான்.

ஆதாம் தொடங்கிய
பயணக் கதையை
அனைவரும் மீண்டும்
தொடர்கின்றோம்.

உழைத்து, உண்டு,
உறங்கியதோடு
உலகில் வேறெதை
கண்டு கொண்டோம்.

இழந்ததைத் தேடினால்
கண்டெடுக்க முடியும்
இல்லாததை தேடினால்
எப்படிக் கிடைக்கும்.

நீருக்கு அடியிலும்
நிலத்துக்கு அடியிலும்
புதையுண்ட சரிதையை
புரியாது புலம்புகிறோம்.

பாரத்ததும் படைத்ததும்
புதுமைகள் அல்ல
பார்க்காதிருப்பதே
புதுமைகள் ஆகும்.

பழையவர் போட்ட
விதைகளில் இருந்து
கனிகளைப் பறித்து
உண்ணுகின்றோம்.

தழும்புகள் எதுவும்
புதுமையாய் இல்லை
தரணியில் நடக்காதது
எதுவுமே இல்லை.

அனுபவம் ஒன்றே
புதுமை என்போம்
ஆளுக்குஆள் அது
வேறானதென்போம்.

## 53. முதுமை

எழுதி எழுதிப்
பார்க்கின்றேன்
எழுத்துக் கூட்டிப்
படிக்கின்றேன்
தொழுது நான்
கற்றதெல்லாம்
தொலைந்துபோகக்
காணுகிறேன்.

முதுமை போடும்
கோடுகளை
முதுகில் தூக்கிச்
சுமக்கின்றேன்.
எதுகை மோனை
தெரியாமலே
இருட்டில் மோதித்
தவிக்கின்றேன்.

கணக்குப் போட்டுப்
பார்க்கையிலே
பிணக்கு இருப்பதை
உணர்கின்றேன்.
எனக்குக் கணக்கு
தெரியாததால்
இளமை வாழ்வில்
தவறிழைத்தேன்.

எல்லோருக்கும்
முடிவு வரும்
ஏதோ ஒருநாள்
சேதி வரும்.
நல்லவராகவே
வாழ வேண்டும்
நமது பணியில்
தூய்மை வேண்டும்.

இருக்கும் சிறிது
காலத்துள்ளே
இறையின் உறவை
தேட வேண்டும்
மறுவாழ்வொன்று
பெறுவதற்கே
மகிமையின் மன்னனை
நாட வேண்டும்.

## 54. அன்னை

அன்னையை
மறப்பதுண்டோ
மாசற்ற
அன்னையை
மறப்பதுண்டோ
எண்ணங்கள்
அனைத்திலும்
இனிமையாய்
பதிந்திருக்கும்
அன்னையை
மறப்பதுண்டோ

தேனினும்
இனிதான
செந்தமிழில்
பாட்டிசைத்து
நம்மை
வளர்த்தெடுக்க
நாளாந்தம்
பாடு பட்ட
அன்னையை
மறப்பதுண்டோ

மண்ணில்
நம்மையெல்லாம்
மனிதர்களாக்கிவிட
தம்மையே
தத்தம் செய்த
புண்ணிய
நீர் ஊற்றாம்
அன்னையை
மறப்பதுண்டோ

அன்பான
தெய்வம்போல்
அருகிலே
வந்து நின்று
தென்றல்போல்
நம்முகத்தில்
தித்திக்க
முத்தமிட்ட
அன்னையை
மறப்பதுண்டோ

சக்தியின் பேரன்பே
தாயாக வந்திருந்து
உத்தமராய்
எமை வளர்க்க
ஓயாது
உழைத்துச் சென்ற
அன்னையை
மறப்பதுண்டோ

## 55. மனிதன்

எல்லைகளைக் கடந்தால்
தொல்லை
இல்லை என்று,
தள்ளி தள்ளிப்
போனதம்மா இயற்கை.

தங்கம் தேடும் மனிதன்
எங்கே விட்டான்
விண்ணை
திங்களுக்குள்
போனதுதான் பயணம்..

வானத்துக்கும் எல்லை
வைத்தான்
வான்பரப்பில் போரைச்
செய்தான்
ஆண்டவனைத்
தேடுகின்றான் மனிதன்.
மாண்டு போன
இயற்கையினை
தோண்டுகின்ற
வேலையிலே
மண்ணைப் பிரித்து
ஆளுகின்றான் மனிதன்.

காலங்களைக் கடந்து
வாழ எண்ணும் மனிதன்
கோளங்களைத்
தேடித்தேடி ஓடினான்.
–இங்கு
வாழும் காலம்
போதாதென்று
வாடி வாடித்தானே
இவன் சாகிறான்.

என்ன என்ன இன்பம்
இவ்வுலகில் உண்டோ
அத்தனையும்
தின்னத்தானே ஆசை.
வண்ண வண்ண
கனவில்,
வாழ்வு நடந்தாலும்
இன்னுந்தான்
முடியவில்லை பூசை.

மாறி மாறித் தேடுகின்ற
வாழ்க்கையிந்த வாழ்க்கை.
மானிடத்தில்
அர்ப்பணிப்பே இல்லை.
நூற்றில் ஒரு பகுதிகூட
உண்மையில்லை சாமி.
இது
கொள்கையேதும்
இல்லாத பூமி.

புத்தம் புதுக் கருவிகள்
நித்தம் நித்தம்
முளைக்குது
நித்திய
கலாச்சாரம்தான் ஏது.
உத்தமியின் கட்டிலிலும்
சத்தம் போட்டுரைக்கின்ற
றப்பர் பொம்மையும்
புருசன் ஆகுது.
இங்கு சீவிக்கும்
கலாச்சாரந்தான் ஏது.

ராஜ ராஜ சோழனின்
ராணி எலிசபேத்தின்
சந்ததியும்
தொலைந்துதானே
போகுது.
இந்தச்
சங்கதி புரியாத
போர் ஓங்குது.
சில
சாதிப்பேய்கள்
எங்க ஊரை
ஆளுது.

இன்று வரை
வென்றவர்கள்
இன்னிலத்தில்
யாருமில்லை
குன்றில் கொடி
போடுவோர்தான் யாரு.
பதவிக்
குல்லாவுக்குள்
மயங்காதோர் யாரு.

## 56. எல்லாமே போச்சி

விடுதலை வீரர்கள்
ஆயுதங்கள் தாங்கி
ஆண்டுகள் பலதாகிப்
போச்சி.
நம்ம
வீடு வாசல்
முழுவதும் இன்றும்
இரத்த வெடுக்காய்
போச்சி.
ஆனால்!
விடியலின் காலம்
எவரும் அறியாது
எங்கோ ஓடிப்
போச்சி.

ஆளுக்கு ஆளிங்கு
அமைப்புகள் தொடங்கி
அடிபிடி சண்டையாய்
போச்சி.
நமக்குள்
கூழுமின்றி குடிலுமின்றி
வறுமைகள் மலிஞ்சி
போச்சி.

ஊரை ஏய்க்கும்
கொடியவர் வரவால்
மரணமே மலிஞ்சி
போச்சி.
நம்ம
ஊருக்குள் முதலைகள்
வந்ததின் பின்பு
ஊத்தைகள்
இராட்சியமாட்சி.

நியாயம் கேட்க
போன மனிசர்
நெஞ்சே வெடிச்சிப்
போச்சி.
இங்கே
நீதி நியாயம்
தர்மம் இவர்கள்
கொள்கைப் பேச்சாப்
போச்சி.

கொள்ளை அடித்து
குடியைக் கெடுத்தவர்
கொடுமைகள் பெரிசாப்
போச்சி.
இன்றும்
ஆளையாள் அடுத்துக்
கெடுத்தவர் வீரம்
அருச்சுனர் கதையாய்ப்
போச்சு

## 57. முடிவல்ல

கொடுமை ஒரு
முடிவல்ல மனிதா
விடிவு வரும்.
அடை மழையும்
கொடும் இடியும்
முடிவடையும்.

பூங்காற்று புது
மெட்டுப் போடும்
பூமி குளிரும்.
ஓங்கார வெறியோடு
ஓலமிடும் கடலும்
அடங்கும்.

இருளுள் ஒளியும்
இருக்குதடா மனிதா
ஜோதி தெரியும்.
கருமேகம் நீரைக்
கக்கியே தீரும்
கழனிகள் நிறையும்.

ஒற்றைச் சூரியனின்
ஒளிமுகத்தைப் பார்
உனக்கும் விடியும்.
நேற்றைப்போல்
இன்று இல்லை
நிலவும் ஒளிரும்.

அறம் நம்மை
வீழ்த்தியது மனிதா
ஆத்திரப் படாதே.
சிரம் தாழ்த்தி
பணிவன்பில்
கரம் தூக்கு.

உரத்த ஓசையை
உறுஞ்சாதே மனிதா
இரத்தம் வரும்.
வருத்தப்பட்டே
சுமைகளை நீ
சுமக்க வரும்.

அடுத்தவர் உறக்கத்தை
கெடுக்காதே மனிதா
கேடு வரும்.
நடுப்பகலில்
இருட்டறையில்
கிடக்க வரும்.

எத்தனை நாள்
காத்திருந்தான் விவசாயி
அறுப்பதற்கு.
ஆத்திரத்தை தோத்தரித்து
அழுந்தாதே மனிதா
அமைதிகொள்.

ஈனப் பிறவியென்று
எவருமில்லை உலகில்
இலக்கைத் துலக்கு.
மானம் பெரிதென
வாழும் மனிதனாய்
தலையை நிமிர்த்து.

நன்றி



முகில்வாணன் பற்றி
உவமைக்கவிஞர் சுரதா!

"கதிர்ச்செந்நெல் விளைகின்ற ஊராம், மட்டக்
களப்பினிலே பிறந்தமுகில் வாணன் என்பார்
அதிர்வேட்டுக் கெதிர்வேட்டுக் கவிஞ ராவார்
அத்தகைய பூகம்பக் கவிஞர் யாத்த
புதுநூலைப் பொழுதுபுல ரட்டு மென்னும்
போராட்டப் பிரகடனக் கவிதை நூலை
உதிக்கின்ற வெளிச்சத்தில் படித்தேன்.பாடல்
ஒவ்வொன்றும் துப்பாக்கித் தும்ம லாகும்"

25.12.1984 'வார்த்தை வாசல்' நூலில் இருந்து..

300/-

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்
ஓகே.பாக்கியநாதன் அறிஞர்சோலை

ISBN978-7654-05-8